Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 08 விலை ரூபா: 5-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 14 (28 06 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 130

Mr. Kodeeswaran

## க. பொ. த. (சா) பரீட்சை கட்டணம் 50 ரூபா

(கொழும்பு)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக் கட்டணத்தை ஐம்பது ரூபாவாக அதிகரித்துள்ளது. கடந்த பல வருடங்களாக இப்பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்து முப்பத்தைந்து ரூபாவையே இதுவரை அறவிடப்பட்டது. ஆனால் இம்முறை 1991 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் தனிப்பட்ட (8 ஆம் பக்கம் பார்க்க)

ராஜீவ் கொலை தொடர்பாக கொழும்பு வந்த

# இந்தியப் புலனாய்வு குழுவிற்கு ஒத்துழைப்பு கிடைக்கவில்லை

## ரஞ்சன் கொலை தொடர்பாகவும் தகவல் வழங்க மறுப்பு

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக கொழும்பு வந்த இந்திய மத்திய புலனாய்வுக் குழுவிற்கு சிறிலங்கா அரசாங்கம் போதிய ஒத்துழைப்பு வழங்கவில்லை எனவும், அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பதில் அசட்டையாக இருந்தது எனவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னதாக ராஜீவ் காந்தியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள இந்தியா சென்ற சிறிலங்கா பிரதமமந்திரி டி. பி. விஜதுங்க ராஜீவ் கொலை தொடர்பாக மேற்கொள்ளப்படும் புலனாய்வுகளுக்கு சிறிலங்கா போதிய உதவியளிக்கும் எனக் கூறியிருந்தமை தெரிந்ததே.

ஆனால், கொழும்புவந்த இந்தியப் புலனாய்வுக் குழுவிற்கு சிறிலங்காவில் பூரண ஒத்துழைப்பு தரப்படவில்லை எனத் தற்பொழுது தெரியவருகின்றது.

குண்டுவெடிப்பில் சம்பந்தப் பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களின் புகைப்படம் (8 ஆம் பக்கம் பார்க்க)

## 32 புளொட் சிறிலங்கா இராணுவத்தில்

(கொழும்பு)

புளொட் அமைப்பைச் சேர்ந்த முப்பத்திரண்டு பேர் இலங்கை அரசின் இராணுவத்துடன் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் புலிகளுக்கு எதிரான சண்டையில் ஈடுபடுத்தப்படுவர் எனக் கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை புளொட் பிரதிநிதி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர் என்ற போர்வையில்

## தேச விரோத செயல்கள் கண்டிக்க வேண்டியவை

- விசாகரூபன்

(யாழ்ப்பாணம்)

"தமிழர்களின் தேசவிடுதலைக்கு எதிரான தேசவிரோத சக்தியின் ஊடுருவல் யாழ். பல்கலைக்கழகத்தில் "மாணவர்" என்ற போர்வையில் ஆதாரத்துடன் பிடிபட்டிருப்பது எம்மை அதிர்ச்சி உற வைக்கிறது. சம்பந்தப்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் என்ற திரை மறைவில் இருந்து கொண்டு தேசவிடுதலைக்கு எதிராக செயற்பட்டமை தேசவிடுதலையை நேசிக்கும் ஒவ்வொருவராலும் வன்மையாக கண்டிக்கத்தக்கதொன்றாகும்." என நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற லெப். சுதர்சன், லெப். நித்திலன் ஆகியோரின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் வைத்துப் மாணவர் ஒன்றியத் தலைவர் இ. விசாகரூபன் கூறினார்.

பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பெருந்திரளாக கூடியிருந்த மாணவர்கள் மத்தியில் அவர் மேலும் கூறுகையில் போதுமான ஆதாரங்களுடன் (8 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை தொடர்பாக கொக்குவில் வாசி கைது

(சென்னை)

ராஜீவ் காந்தி படுகொலையில் சம்பந்தப்பட்ட ஒற்றைக் கண் நபரான சிவராசன், ஜனுக்கும் அவனது சகாக்களான சுபா, கண்ணன் ஆகியோருக்கும் தங்க இடம் கொடுத்து ராஜீவ் கொலைச்சதித் திட்டத்திற்கு உடந்தையாக இருந்தமைக்காக கொக்குவிலைச் சேர்ந்த ஜெயக்குமார் என்ற 29 வயது வாலிபனை மத்திய குற்றப் புலனாய்வுத் துறைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் சென்னையில் கைது செய்தனர்.

நேற்றுப் பிற்பகல் அவரைச் செங்கல்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்கள். நீதிபதி 30 நாட்கள் பொலிஸ் காவலில் வைக்க உத்தரவிட்டார். ஜெயக்குமார் வடசென்னை (8 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணம் நிறுத்தும் வரை புதிய உணவு முத்திரை இல்லை

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நடைபெற்ற அரசாங்க அதிபர்களுக்கான உயர்மட்ட மாநாட்டில் கலந்து கொண்டபின் நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் திரும்பிய யாழ். அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் நேற்று மாலை தமது இல்லத்தில் ஓர் பத்திரிகையாளர் மாநாட்டை நடாத்தினார். அதில் அவரால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:

★ பருத்தித்துறை இறங்கு துறையைப் புனரமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சின் அதிகாரி சம்மதம் தெரிவித்துள்ளார். இதன் திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

★ நாலாயிரம் கடவுச் சீட்டு விண்ணப்பப் படிவங்கள் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நீண்டகாலமாக இருந்து வந்த தட்டுப்பாடு நீங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

★ யாழ் செயலகத்தினூடாக கடவுச் சீட்டுக்கு விண்ணப்பித்தவர்களின் கடவுச் சீட்டுகள் கொழும்பில் தேங்கிக் கிடக்கின்றன. இவற்றில் ஆயிரத்து முந்நூறு கடவுச் சீட்டுக்களை வடபகுதிக்குக் கொண்டுவர கடவுச்சீட்டு கட்டுப்பாட்டு அதிகாரி அனுமதி வழங்கிய போதிலும் கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி மறுத்து விட்டது.

★ கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிப்போர் விண்ணப்பப்படிவங்களை இனி யாழ். செயலகத்தில் ஒப்படைக்கலாம். நீண்ட காலமாக செயற்படாதிருந்த இப்பிரிவு மீண்டும் செயற்பட உள்ளது. இவ்விண்ணப்பங்கள் அரச அதிபருடாக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படும்.

★ வடக்கிலிருந்து கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிப்போரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் மூலப்பிரதிகள் என்பதை நிரூபிப்பதற்காக அரசாங்க அதிபர் அல்லது மேலதிக அரசாங்க அதிபர் இனிமேல் அப்பிரதிகளில் கையொப்பமிட வேண்டுமென கடவுச்சீட்டு கட்டுப்பாட்டு அதிகாரி பணித்துள்ளதாகத் தெரியவருகிறது.

★ யாழ். செயலகத்திற்கு ஜெனரேற்றர் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் அடுத்த வாரம் முதல் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களின் விநியோகம் துரிதப்படுத்தப்படும்.

★ யாழ். மாவட்டத்திற்கு 91 ஆம் ஆண்டிற்காகப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இருபத்தைந்து லட்சம் ரூபா ஒதுக் (8 ஆம் பக்கம் பார்க்க)

1990 டிசம்பர் க பொ. த (சா) பரீட்சை

## திட்டமிட்டவாறு ஆகஸ்டில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் தடைப்பட்டுள்ள க. பொ. த. (சா. தர) 1990 டிசம்பர் பரீட்சை திட்டமிட்டபடி ஆகஸ்டில் நடைபெறுமென யாழ். அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இப்பரீட்சையை வடக்குக் (8 ஆம் பக்கம் பார்க்க)

வட பகுதிக்கான எக்ஸ்ரே கருவிகள்

## தெற்கிற்கு அனுப்பும் முயற்சி அதிகாரிகளால் தடுப்பு

வட பகுதிக்கென அனுப்பப்பட்ட பல இலட்ச ரூபா பெறுமதியான இரண்டு எக்ஸ்ரே படப்பிடிப்புக் கருவிகளை அனுராதபுரத்திற்கும் காலிக்கும் மாற்றுவதற்கு அரசு எடுத்த முயற்சி திருமலை மாவட்ட புனர்வாழ்வு செயலதிபரின் ஆட்சேபனையை அடுத்து கைவிடப்பட்டது.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ஜப்பானிலிருந்து வட பகுதிக்கென அனுப்பப்பட்ட போதிலும் இவை கொழும்பில் வைக்கப்பட்டிருந்தன. இந்த இரண்டு கருவிகளையும் அனுராதபுர வைத்திய சாலைக்கும் காலி வைத்திய சாலைக்கும் திசை திருப்பி விடுவதற்கான (8 ஆம் பக்கம் பார்க்க)

குடாநாட்டு மக்களை

## திட்டமிட்டுப் பட்டினி போட சிறிலங்கா அரசு முயற்சி

யாழ். குடாநாட்டிற்கான உணவு விநியோகத்தைச் சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டுக் கட்டுப்படுத்திவருவதாகத் தெரிகிறது. கடந்த இரண்டு மாதத்தில் இச்செயற்பாடு தீவிரமாகக் கடைப்பிடிக்கப் பட்டுவருகிறது.

கடந்த மேயில் ஒரேயொரு உணவுக்கப்பல்மட்டுமே யாழ்ப்பாணம் வந்தது கடந்தமாதம் முப்பதாம் திகதி வந்த குமண கப்பலில் உணவுவந்தது. அதன் பின்னர் வந்த அமேசன் கப்பலில் எண்ணையுடன் பாதி அளவு உணவு மட்டும்தான் வந்தது அதிலும் நூறு மெற் (8 ஆம் பக்கம் பார்க்க)

**வரி விளம்பரம்**

**நாடகங்கள்**

வானொலியில் பல முறை ஒலிபரப்பப்பட்டு லட்சக் கணக்கானவர்கள் கேட்டு மகிழ்ந்த 19 நாடகங்கள். அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய கெட்டிக்காரர்கள் 25/- முதலாம்பிள்ளை 30/- நகைச்சுவை நிறைந்தவை மாணவர்களும் படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்றவை.

(R/1469)

**விற்பனைக்கு**

அலங்காரப் பந்தல்கள், சாளி மோட்டார் சைக்கிள் கரைத் தகரங்கள் (சிறிய நெளி 6 அடி 7 அடி 8 அடி 9 அடி வரை) ஷோகேஸ் இரண்டு ஆகியன உடன் விற்பனைக்கு உண்டு சிக்கோ கே. கே. எஸ் வீதி, தாவடிச்சந்தி.

(R/1487)



## வைத்தியர் தேவை

நடமாடும் வைத்திய சேவைப் பிரிவில் பணி புரிய மருத்துவமாணி (எம்.பி.பி.எஸ்.), உதவி வைத்திய அதிகாரி (ஏ.எம்.ஓ.), பதிவு வைத்திய அதிகாரி (ஆர்.எம்.ஓ.) தகுதியுடையோர் 06-07-91க்கு முன் விண்ணப்பிக்கவும்.

கௌரவ செயலாளர்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 73, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

(B-2738)



## நிருபர்களுக்கான கூட்டம்

### செய்தி தகவல் மையம்

திட்டமிட்டவாறு 29.06.91 அன்று காலை 9.00 மணிக்கு செய்தி தகவல் மைய நிருபர்களுக்கான கூட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். சகல நிருபர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நிர்வாகி
செய்தி தகவல் மையம்
கோப்பாய்.

(B-2740)



புதிய முகவரியில்

DHL WORLDWIDE EXPRESS

உலகம் முழுவதுக்குமான துரித

## தபால் சேவையை


நாம் நடாத்தி வருகின்றோம்.
எமது புதிய முகவரியில்
உங்கள் கடிதங்களை ஒப்படையுங்கள்.

**DHL INTERNATIONAL**
C/o. COSMOS MARKETING SERVICES,
120, K. K. S Road, JAFFNA.

(B/2736)


## நினைவு கூருகின்றோம்...

**1991 - 06 - 28**



கப்டன்
முத்துச்சாமி



லெப்.
சுதர்சன்



2ம் லெப்.
கோபி



லெப்.
மொட்டை களன்



மேஜர்
கஜேந்திரன்

1986 ஆம் ஆண்டு புலிபாய்ந்தகல்லில் இருந்த எமது முகாமை இரண்டாவது நாளாகச் சுற்றிவளைத்திருந்த சிறிலங்காப்படையினருடன் ஏற்பட்டமோதலில் வீரமரணமெய்திய

கப்டன் ஜிம்கெலி (சின்னப்பிள்ளை நடராசா - கிரான்)
லெப். மொட்டை களன் (அழகரத்தினம் மணிவண்ணன் - மட்டுநகர்)
குமார் (வில்லியம் அருள்நாதன் - ஏறாவூர்)
சிந்து (சித்திரவேல் ஜெயராசா - கொம்மாதுறை)
சைமன் (மயில்வாகனம் மாதவன் - கிரான்)
சரவணன் (பிள்ளையார் சௌந்தரராஜன் - கிரான்)
றொசான் (ஐயாத்துரை அமிர்தநாதன் - மயிலியதனை, தொண்டமானாறு)

சிறிலங்காப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீரமரணமெய்திய

கதிரவேலாயுதம் கேதீஸ்வரன்

1987 ஆம் ஆண்டு மூதூர் கூனித்தீவில் இருந்த எமது முகாமை சிறிலங்காப் படையினர் சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமெய்திய

மேஜர் கஜேந்திரன் (சிங்காரவேல் சுந்தரன் - திருமலை)
கப்டன் சிறி/குளியா (அப்புசாமி அன்பரசு - திருமலை)
கப்டன் முத்துச்சாமி (குமாரசூரியர் முரளீதரன் - சலுவாஞ்சிக்குடி)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன்

லெப். சுதர்சன் (பூபாலபிள்ளை சிவகுருநாதன் - ஆரையம்பதி)
லெப். சுரேஷ் (தங்கராசா இளங்கோ - ஆலங்கேணி)
2ஆம் லெப். கோபி (நாகமணி ஆனந்தராசா - ஆரையம்பதி)
தாகூர் (கஜேந்திரன் - வல்வெட்டித்துறை)
நிமால் (செல்லையா நற்குணராஜா - கட்டைபறிச்சான்)
லொயிட் (இருதயநாதன் யோகநாதன் - மூதூர்)

இதே முற்றுகையின் போது கூனித்தீவில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 9 தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு 40 ஆம் கிராமத்தில் தேசவிரோதிகளால் கொல்லப்பட்ட

குரு (சித்திரவேல் சத்தியநாதன் - பக்கியெல்ல)

1989 ஆம் ஆண்டு பழைய வாய்க்காலில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரமரணமடைந்த

கப்டன் குட்டி அக்பர் (அருளம்பலம் குகபாலன் - மட்டுவில்)

முறக்கொட்டாஞ்சேனையில் தேசவிரோதிகளுடனான மோதலின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

நித்தி (சந்தையா விநாயகமூர்த்தி - முறக்கொட்டாஞ்சேனை)

மயிலிட்டியில் தேசவிரோதிகளினால் சித்திரவதை செய்து வெட்டிக் கொல்லப்பட்ட

தேசபக்தர் செல்வம் அக்கா

புலோலி - கந்தமுருகேசனார் சிலையருகில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்

கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் ஆலய வீதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கோப்பாய் உதவி அரசாங்க அதிபர், ஆலய அர்ச்சகர் உட்பட மூன்று தமிழர்கள்

1990 ஆம் ஆண்டு பலாலியில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலினால் வீரமரணமெய்திய

உமாகாந்த் (கனகலிங்கம் நவரட்ணராஜா - டச்வீதி, சாவகச்சேரி)
தம்பி (சிவசாமி சிவப்பிரகாசசுந்தரம் - மயிலிட்டி)

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டினால் வீரமரணமெய்திய

குமரன் (சுப்பையா கனகராஜ் - உடம்கல், நெடுங்கேணி)

மன்னார் வீதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

இன்பன் (க. நவரட்ணம் - தாண்டிக்குளம்)

தாண்டிக்குளத்தில் சிறிலங்காப் படையினருடனான நேரடிமோதலில் வீரமரணமடைந்த

லெப். செந்தில்/மகேசன் (சரவணன் மதனராசா - இரணை இலுப்பைக்குளம்)

தமிழீழ கடற்பரப்பில் (கொக்கிளாய்) படகில் செல்கையில் சிறிலங்காப் படையினரின் தாக்குதலுக்குப் பலியான 5தமிழர்கள்

புன்னாலைக்கட்டுவனில் பாரம் சுமக்கும் வண்டிமீது சிறிலங்காப் படையினரின் உலங்கு வானூர்தி மேற்கொண்ட தாக்குதலினால் மரணமடைந்த 4 மாதக் குழந்தை

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B-2735)

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி




''செயலில் காட்டும் தேசப்பற்றுஎன்பது, வெறும் மனக்கிளர்ச்சியோ, தாய் நாட்டிடம் கொள்ளும் பாச உணர்ச்சியோ கூட ஆகாது: நம்முடன் வாழும் நாட்டினர்க்கெல்லாம் சேவை செய்ய வேண்டுமென்ற ஆவேச உணர்வே தேசப்பற்றாகும்.''

-விவேகானந்தர்



## தழலிடு!

அன்னைத் தமிழை மறந்தான்! - பாவி
அடுத்தவன் கால்களை நக்கிக் கிடந்தான்!
என்ன கொடுமை இழைத்தான்! - தீயன்
எட்டப்பனார் வேலை செய்து பிழைத்தான்!

மாற்றார்க் கழைப்பு விடுத்தான் - வீட்டில்
மதுவும் கொடுத்தான்! மகளும் கொடுத்தான்!
சோற்றுப் பதவிகள் ஏற்றான்! - மானம்
தூள் தூளாய் ஆக்கி நெருப்பிலே போட்டான்

பல்லாயிரம் நாட்பயிரை - வீரம்
பாயும் தமிழ்க்குல மாந்தர் உயிரை
எல்லாம் நிறைந்த தமிழை - தழலில்
இட்டவன் உடலமேலே இடடா தழலை

- கவிஞர் காசிஆனந்தன்
(1982ல் வெளிவந்த காசிஆனந்தன் கவிதைகள் நூலிலிருந்து)





கோழைத் தனங்களுக்கும் இயலாமைக்கும் சித்தாந்த முலாம் பூசி தமிழீழ விடுதலைப்போராட்டத்திலிருந்து ஆயிரக்கணக்கான இளைஞர்களை அந்நியப்படுத்தியவர்கள் என்ற வரலாறு புளொட் குழுவினருக்கே உண்டு. ஒரு சமயம் திருநெல்வேலியில் தமது இயக்கப் போராளிகள் சிலரை கைதுசெய்துகொண்டு போய் தடுத்து வைத்திருந்தனர் இவர்கள். கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்யும்படி உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கைதுசெய்யப்பட்ட போராளிகளினது பெற்றோரும், உறவினரும், நண்பர்களும் இந்தப்போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். உண்ணாவிரதம் நடக்கும் இடத்துக்கு கொஞ்சம் தள்ளி புளொட் இயக்கத்தவர் நின்றனர். அந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தான் டயஸ். புளொட் இயக்கத்தவருக்குக் கேட்கக்கூடியதாக "அவங்கள் எல்லாரையும் மண்டையில போட்டுட்டாங்கள்; நீங்கள் ஏன் வீணாப் போராட்டம் நடத்துறீங்கள். எழும்பி வீட்டுக்குப் போங்கோ' என்றான். வீட்டுக்காரர் தயங்கி நின்றனர். பின்பு வேம்பாகக் கசந்த இச்செய்தி கேட்டு அழுதனர்.

"ஏன் நிக்கிறீங்கள் ஒண்டும் பிரயோசனமில்லை; வீட்ட போங்கோ' மீண்டும் சொன்னான் டயஸ். புளொட் இயக்கத்தவர் டயசிடம் வந்தனர். 'நீர் எப்பிடிச் சொல்லுவீர் மண்டையில போட்டிட்டம் எண்டு?' என்று கேட்டனர். 'நான் திரும்பவும் சொல்லுறன் நீங்கள் அவங்களை மண்டையில போட்டிட்டீங்கள்" என்றான் டயஸ். "நீர் அதை நிரூபிப்பீரோ?" என்று கேட்டனர் புளொட் இயக்கத்தவர். 'நான்ஏன் நிரூபிக்கவேணும்; நீங்கள் மண்டையில போட்டிட்டீங்கள் எண்டு நான் சொல்லுறன்; அப்பிடிப் போடயில்லையெண்டா நீர் எல்லோ அதை நிரூபிக்கோணும்' என்றான் டயஸ்; அவ்வளவுதான் வேகமாகச் சென்றனர் புளொட் இயக்கத்தவர். சில நிமிட நேரங்களில் வேர்த்து விறுவிறுக்க வந்து சேர்ந்தனர். அவர்களுடன் கைதுசெய்யப்பட்ட போராளிகளும் வந்திருந்தனர். அவர்களை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக்கொண்டு நிற்கும் பெற்றோருக்கு முன்னால் விட்டுவிட்டு 'இப்ப என்ன சொல்லுறீர்' என்று கேட்டனர் புளொட் இயக்கத்தவர். புன்சிரிப்புடன் டயஸ் சொன்னான் 'இதுக்குத்தான் நான் அப்பிடிச் சொன்னனான். இவ

வாட்டி நீங்கள் இவங்களை விட்டிருப்பீங்களோ? என்னரை அலுவல் முடிஞ்சுது நான் வாறன்' போராளிகளிடமும் பெற்றோரிடமும் 'புளொட் இயக்கத்தவரிடம்' கூறிவிட்டு பயணமானான் டயஸ். போராளிகளைக் கண்ட பெற்றோர் மகிழ்ச்சிக் களிப்பில் திக்க அசந்துமிழ்ந்த நிலையில் நின்றனர் புளொட் இயக்கத்தவர். இதுதான் டயஸ் பாணி. டயஸின் சாமர்த்தியத்திற்கு வேறு உதாரணங்கள் சொல்லி விளங்கப்படுத்தத் தேவையில்லை.

இவனது துப்பாக்கி யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து பொத்துவில் பொலிஸ்நிலையம்வரை விடுதலைப் பண்



மேஜர் டயஸ்

பாடியது. தென் தமிழீழத்துக்குச் செல்லும் போராளிகளது பயணம் வேட்டு யாத்திரையாகவே அமைவதுண்டு. இவனது பயணமும் அதற்கு விதிவிலக்கல்ல. போகப்போகத் தாக்குதல் நடத்திக் கொண்டே சென்றது இவன் சென்ற குழு. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைத் தாக்கிக் கைப்பற்றியவுடன் திருமலைக்குச் சென்று அங்கு குச்சவெளி பொலிஸ் நிலையத்தைத் தாக்கிக் கைப்பற்றி அப்படியே மட்டக்களப்புக்

குச் சென்று அங்கு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தைத் தாக்கிக் கைப்பற்றி அப்படியே அம்பாறை மாவட்டத்தினுள் காலடி எடுத்து வைத்தான் டயஸ். வேட்டு யாத்திரையில் இடைப்பட்ட காலத்தை சூறாவளிப் பிரச்சாரத்தை மேற்கொள்ளவும் பயன்படுத்தினான் இவன்.

படுவான்கரை வயல்வெளிகளில் இவனது குரல் விடுதலையின் தேவையை எதிரொலித்தது. கொக்கட்டிச் சோலையிலும், அம்பிளாந்துறையிலும், பழுகாமத்திலும் பகிரங்கக் கூட்டங்கள் நடாத்தினான். டயஸின் காலடி படும்வரை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் புலிகள் பகிரங்கக் கூட்டம் நடத்தியதில்லை.

கிராமங்களில் இவனது உரையைக் கேட்கக் கூடினர் மக்கள். எல்லாம் எமது விதி என்று எண்ணியிருந்த மக்கள் மத்தியில் இனி ஒரு விதிசெய்வோம் என்பதை எடுத்துரைத்தான். அதைத் தொடர்ந்து

"படுவான்கரையில் உனது கடமை முடிந்தது. நீஇனி அம்பாறைக்கு போ'' என்ற கட்டளை கிடைத்ததும் தமிழீழத்தின் அடி எல்லைக் கிராமங்களுக்குப் பயணமானான் டயஸ். கல்முனை, காரைதீவு அட்டப்பள்ளம், அக்கரைப்பற்று, கோளாவில், தம்பிலுவில், திருக்கோயில், கோமாரி விநாயகபுரம், பொத்துவில் என எல்லாக்கிராமத்தவருமே இவன் பேசுவதைக் கேட்க ஆசைப்பட்டனர். இத்தனை மக்களுக்குள்ளும் இவனுடன் பேச ஆசைப்பட்டது ஒரு உயிர். அந்தப் புனிதவதியே பின்னாளில் இவனுக்கு மனைவியானாள்.

அம்பாறைமாவட்டத்தின் விநாயகபுரத்தில் அரசபடையினருக்கு கண்ணிவெடியின் சக்தியினை முதன்முதலில் தெரியப் படுத்தியவர்களில் டயசும் ஒருவன். அத்தாக்குதலில் ஆறு அரசபடையினர் மாண்டனர். தம்பட்டை, கல்முனை எனப்பல்வேறு இடங்களிலும் இவனது தாக்குதல்கள்

> ''அன்னியனின் காலடியை அடிபணிந்து அடிவருடிகளாய் வாழ்வதை விட தாயக மண்ணை முத்தமிட்டு மாளவது மேலானது.
>
> -டயஸ்

போராளிகள் போலவே மக்களும் செரிலாக்களாக மாறினர். தோணிக்காரர் ஆற்றுக்கு அப்பால் கொண்டு போய்விட்டு திருப்பி வரும் நேரம் வரை காத்திருந்தனர் விறகு வெட்டப் போவோர் எங்கே எஸ் ரீ எவ் நிற்கிறான் என்பதைப் பார்த்துச் சொன்னனர். மீன்பிடிப்போர் ''தம்மட பெடியனுகளுக்கு'' என்றொரு பங்கு ஒதுக்கினர், உலையில் போடப்படும் அரிசியில் வீட்டில் இல்லாதவர்களுக்கும் ஒரு பங்கு போட்டனர் பெண்கள்; மொத்தத்தில் போராட்டத்தை, போராளிகளை நேசித்தனர் அந்த மக்கள், இதேவேளை நாளாந்தம் இயக்கத்தில் இணைந்து கொண்டிருந்தது இளைஞர் கூட்டம்.

தொடர்ந்த வண்ணமயிருந்தன. இலங்கை-இந்தியஒப்பந்தம் ஏற்பட்டதும் சிலநாட்கள் மட்டுமே இவனது துப்பாக்கிஓய்ந்திருந்தது. அந்நாளில் திருக்கோவில் முகாம் இராணுவ அதிகாரி பண்டார இவனைக் கண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைப் பற்றிக்கேட்டபோது "இதால உனக்கும் லாபமில்லை எனக்கும் லாபமில்லை இதைப் பற்றிச்சொல்லஒண்டுமேயில்லை என்று கூறிவிட்டு இந்திய அரசின் நோக்கங்கள் பற்றி அவர்களுக்கு எடுத்துரைத்தான் போராளிகள், பொதுமக்கள் மட்டுமல்ல சிறிலங்கா இராணுவத்தினரும் இவனிடம் இவ்வளவு அரசியல்திறமை உள்ளதா? என அதிசயித்தனர். அதுபோலவே யாழ்ப்பாணத்

(7ம் பக்கம் பார்க்க)

# கையில் கிடைத்த கடிதம்

**சிறுகதை**

''இன்டைக்கு எப்படியாவது ஒரு கடிதம் வீட்டுக்கு எழுதி சீலன் அண்ணையிடம் குடுத்திடவேணும்'' என எண்ணிக்கொண்டான் ஆனந்தன். காலை நேரப்பயிற்சி முடிந்து ஒவ்வொருவராக அழைத்து அன்றைய வேலை பற்றிக் கூறிக்கொண்டிருந்த சீலன், ஆனந்தனின் முறை வந்தபோது அவனை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தான். 'தம்பி, உம்மடை வீட்டுக்காரர் உம்மை ஒருக்கால் கட்டாயமாய்ச் சந்திக்க வேணும் எண்டு படாதபாடு படுகினம். இயக்கம் கட்டாயப்படுத்தித் தான் உம்மை இஞ்சை மறிச்சு வைக்கிறமாதிரி அவைநினைக்கினம். ஆனபடியா நீர் இன்டைக்கு பரராசசிங்கம் 'காம்பு'க்குப் போய் வீட்டுக்காரரைச் சந்திச்சுப் போட்டு வாரும்! என ஒரே மூச்சில் சொல்லி முடித்தான். ஆனந்தனின் கண்களில் நீர் சொரிந்தது. சீலனுக்குச் சங்கடமாயிற்று 'ஆனந்தன் ஓரமாய் ஒதுங்கி நிலலும். மற்றது ஆர் வசியை யிலை? சஜேனா, உமக்கு 12 மணி வரை முன்பக்க சென்றி, 12-4 மணிவரை சமையல் உதவி, 4-6 மணிவரை பின்பக்கச் சென்றி, 6-8 மணிவரை கம்யூனிக்கேசன் படிப்பு இவ்வாறாக ஒவ்வொருவராகக் கூப்பிட்டு நாற்பது பேருக்கும் வேலைகளைப் பகிர்ந்து விட்டு ஆனந்தனின் பக்கம் திரும்பிய போதும் அவனது அழுகை ஓயவில்லை. கண்டிப்பான தோரணையில் 'ஆனந்தன் இங்க வாரும்' என அழைத்தான் சீலன். மெதுவாக அவனை நோக்கி வந்த ஆனந்தனிடம் ஏன்தம்பி அழுகிறீர்? என்றான் சீலன். 'எனக்கு வீட்டுக்காரரை சந்திக்க விருப்பமில்லை' மெதுவாக முணுமுணுத்தான் ஆனந்தன். தோள் மேல் கையை வைத்து பரிவுடன் என்னை உம்மட சொந்த அண்ணனா நினைச்சுச் சொல்லும், 'ஏன் சந்திக்கமாட்டன் என்னுகிறீர் உண்மையா அதை எப்படிச் சொல்லுறது எண்டு எனக்கு விளங்கேல்லை அண்ணை. ஆனா நான் சந்திக்க மாட்டன் என்னை அங்க போகச் சொல்லாதையுங்கோ' என முனகிய ஆனந்தனைப் பார்த்து 'ஏன் வீட்டுக்காரரைச்சந்திக்க மாட்டன் எண்டதை கடிதத்தில் எழுதித்தாரும். உமக்கு இன்டைக்கு அது தான் வேலை எனக் கண்டிப்பும் அன்பும் கலந்ததொரு தோரணையில் சொல்லிவிட்டு தனது சாலி மோட்டார் சைக்கிளை நோக்கித்திரும்பி விட்டான் சீலன். இனி அவன் முகாமிற்கு திரும்பிவரும் நேரம் எவருக்கும் தெரியாது. ஆனால் அவன் சொல்லிவிட்டுப்போன வேலைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டிருக்கும். அன்பினாலும், கண்டிப்பினாலும், ஒரு வித அச்சம் கலந்த செயல்களினாலும், அங்கிருந்த அனைவர் மீதும் ஆளுமை செலுத்தி வந்தான் சீலன். அதனால் இன்டைக்கு கடிதத்தை எழுத வேண்டிய கட்டாயம் ஆனந்தனுக்கு. சீலன் அண்ணைக்கு என்று தொடங்கி அப்பாவைச் சந்திக்கமுடியாத காரணத்தை எழுதுவோமா? அல்லது அம்மாவுக்கு, தங்கச்சிக்கு என்று யாருக்கேனும் முகவரியிட்டு எழுதி சீலன் அண்ணை மூலம் சேர்ப்பிப் போமா? எனப் பலவாறாகவும் யோசனை செலுத்திவிட்டு ஈற்றில் தனது இருக்கைக்கு வந்தான் ஆனந்தன்.

அன்பான அப்பாவிற்கு,

வணக்கம். நான் நலம். நீங்கள் என்னைப் பற்றி பலரிடமும் விசாரித்து என்னைச்சந்தித்து விடப் பல முயற்சிகள் செய்வதாகநான் அறிகிறேன் அம்மாவின் உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிந்து மிகக்கவலை. மற்றும் தங்கச்சி, தம்பி, அண்ணன், அப்பம்மா ஆகியோரது சுகநலனுக்காக எனது அன்பான விசாரிப்புக்கள் உரியதாகட்டும் நீங்களும், தாயாரும், சகோதரங்களும் ஏனையோரும் என் மீது கொண்டிருக்கும் அன்புக்கும், பாசத்திற்கும் என்றும் நான் கடமைப்பட்டவன், ஆதலினால் என்னைத் தேடுகின்ற- அல்லது சந்திக்க எடுக்கின்ற அனைத்து முயற்சிகளையும் இக்கடிதம் கண்ட பின்னராவது கைவிடுவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்,

அப்பா! நீங்கள் நேற்றுமுன்தினம் எனது நண்பன் சிவாவைச்சந்தித்தபோது எனக்குள் இப்படி ஒரு ஆர்வம் முளைவிட்டிருப்பதை அவதானிக்கவில்லை என்றும், தெரிந்திருந்தால் நீங்களே இயக்கத்தில் சேர்த்து எனக்கு நல்ல பதவி வாங்கிக் கொடுத்திருப்பேன் என்றும் கூறினீர்களாம். இது எனக்கு மகிழ்ச்சியை அல்ல அதிர்ச்சியையேதந்தது. ஏனெனில் சிறுபராயம் தொடக்கம் நீங்களே அரசியல் கூட்டங்களுக்கெல்லாம் அழைத்துப் போன ஞாபகம் எனக்குள் இன்னும் பசுமையாய், அது மட்டுமல்ல, 'அடுத்தமேதினம் தமிழீழத்தில் தான் கொண்டாடப்படும்' என்று அமிர்தலிங்கம் அறுதியிட்டுக் கூறிய போது கை தட்டுவதற்காக என்னைப்பிடித்திருந்தகையை விலக்கியதும், நான் உங்களைத்தவறவிட்டு கூட்டத்தில் சிக்குண்டதும் அப்போது பத்துவயதுப்பராயத்தைக் கடந்த என் நினைவில் பதிந்திருக்கிறது. ஆனால் நானே சேர்த்து நல்ல பதவியும் வாங்கித்தந்திருப்பேன் என்று நீங்கள் கூறியதாக அறிந்தபோது தான் எனக்கு அதிர்ச்சியாகப் போய் விட்டது. அப்பா! பதவிக்காகவோ - பகட்டுக்காகவோ - சொந்தநலனுக்காகவோ உங்கள் மகன் இயக்கத்தில் சேர்ந்திருப்பதாக கருத வேண்டாம். பத்துவருசத்திற்கு முதல் கணேசு மாமாவைத் தேடி ஆமியும், பொலீசும் உங்கள் ஊரைச் சுற்றி வந்தது உங்களுக்கு ஞாபகமிருக்கும் தானே அன்றுமுதல் மிக அண்மைக் காலம் வரை ஆமியைக்கண்டு அஞ்சிப் பயந்து நடுங்கி ஓடிய போதெல்லாம் எப்போதாவது இவர்களை நாமும் இப்படி ஓட வைக்க வேண்டுமென்ற ஆசை என்னுள் சின்ன தாக முளைவிட்டது என்னுடன் இணைந்துகாலமும் வளர்ந்தது ஏ. கேயும் எஸ், எம். ஜி. யும் இன்ன பிற ஆயுதங்களும் எங்கள் வீட்டு வாசல்வரை வந்து விட்டது. நீங்களும் உணர்ந்தது தானே. இலலாவிட்டால் சஜன் அண்ணாவையும், சோதி அண்ணாவையும் அவர்களோடு வரும் பிறரையும் வீட்டில்தங்கவைத்து ஆதரித்து இருக்கமாட்டீர்களே.

சஜன் அண்ணாவிடமும்; சோதி அண்ணாவிடமும் என்னையும் இயக்கத்தில் சேர்த்துவிடும்படி எத்தனையோ தடவை கேட்டேன். ''நான் பெரியவனாக வரவில்லை எனது உயரம் போதாது'' என சொன்ன போதெல்லாம் ஒரு நாள் வளருவேன் தானே என எனக்குள் எண்ணிக் கொள்வேன்.

ஊரோடு இருக்கிற சிறிலங்கா அரசாங்க உத்தியோகத்தரான நீங்கள் உத்தியோகத்தையும்பாதுகாக்கவேணும் பெடியளையும் சமாளிக்க வேணும் என்று எண்ணிக் கொண்டு அந்தரத்தில் ஊஞ்சலாடுவது போல் நடந்து வருவதை நானும் நன்கறிவேன்.

இந்த நிலையில் நான் இயக்கத்தில் இணைந்து கொண்ட செய்தி கொழும்பில் இருக்கிற உங்கள் மேலதிகாரிகளுக்கு தெரிய வந்து விடுமோ என நீங்கள் அஞ்சுவதும் எனக்குத் தெரியும். அப்பா! உங்கட மேலதிகாரியின் கந்தோரில் வேலை பார்க்கிற மிஸ்டர் கதிர்காமத்தம்பி வீட்ட வந்த போது ''நான் இவங்கள் இயக்கப் பெடியளோடை கொஞ்சம் ஐக்கியமாய்த் தான் நடக்கிறான். இல்லாட்டி, என்ர பெடியளும் எல்லே அவங்களோடை போய்ச் சேர்ந்திடும்'' என்று சொன்னதாய் கேள்விப்பட்டன்.

அதாவது நான் இயக்கத்தில் சேர்ந்து விடக்கூடாது என்பதற்காகவே இயக்க ஆதரவாளர் மாதிரி நீங்கள் நடப்பதாக அறிந்தபோது நான் துவண்டுபோய்விட்டேன். அதன் பிறகு உங்கள் மீதிருந்த மதிப்பு எனக்குள் சிதையத் தொடங்கியதும் உண்மைதான்.

எனது நண்பன் வேந்தன் C-90 ஓட்டிக்கொண்டு வரக் கண்ட போது அவனை வழி மறித்துக் கதைத் திரீர்களாம். நானும் ஒரு C-90க்கு ஆசைப்பட்டதை ஞாபகப் படுத்தி வாங்கிக்கொடுக்காத கோபத்தில் தான் இயக்கத்திற்குப் போயிருக்கக் கூடும் என அபிப்பிராயப்பட்டீர்களாம்.

அப்பா! சண்டைபெல்லாம் ஓய்ஞ்சு முடிந்து போன மாதிரி இருந்ததொரு காலத்தில் நானும் படிக்கவும்-சோதனை எடுக்கவும் ஆசைப்பட்டது உண்மைதான். பல்கலைக் கழகம் போகவும்-பட்டதாரியாகவும் கனவு கண்டதுமெய்தான். அதனால் ரியூசன் வகுப்புகளுக்குப் போய்வர உதவுமே என்பதற்காக C-90 அல்லது சாளி (Chaly தானும் வாங்க ஆசை கொண்டதும் உண்டு. உங்களின் இயலாமையால் எனது அற்ப ஆசை பூர்த்தியாகவில்லை என்பதற்காக உங்கள் மீது எனக்குத் துளிகூடக்கோபமில்லை அதனால் எனக்கு விரக்தியுமில்லை. மோட்டார் சைக்கிள் மீது கொண்டமோகத்திற்காக இயக்கத்தில் நான் சேரவுமில்லை;

இந்த நாட்டில் வாழும் மக்களையும், மண்ணையும் நேசித்து எமது எதிர்கால சந்ததியாவது சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழ வேண்டுமென்பதற்காக- அதை அடைவதற்கு இன்று போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதனால் போராட்டத்தைக் கைகட்டி நின்று வேடிக்கை பார்க்கக் கூடாது என்பதற்காக நான் இயக்கத்தில் இணைந்து கொண்டிருக்கிறேன். எனவேதான் என்னைச் சந்திப்பதாலோ, என்னுடன் பேசுவதாலோ எனது மனநிலையில் எந்த மாற்றமும் வந்துவிடப் போவதில்லை என்று சந்தேகத்திற்கு இடமின்றி வலியுறுத்திட விரும்புகின்றேன்.

மேலும் உங்களால் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு மாபெரும் குடும்பத்தில் இப்போது தான் நான் பிறந்துள்ளேன். நாளை தான் எனக்குப்பெயர் சூட்டப்படலாம். நாங்கள் தங்கியிருக்கும் இடத்தில் எங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் அண்ணா மிகவும் நல்லவர்.

அம்மாவைப் போல உபசரித்து உணவூட்டுவதிலும், உங்களைச்சிலசமயம் நினைவூட்டும் கண்டிப்பும் ஓடி ஓடி வேலை செய்யும் சுறுசுறுப்பும் அவரிடத்தில் ஒரு பிரியத்தை வளர்க்கின்றது. என்னும் இயல்பாக கலகலப்பாக பேச முடியாதபடி ஒரு விதமான மரியாதை கலந்த பயம் எனக்குள். பொம்மரும், ஹெலியும் துப்பாக்கிகளின் சட சடப்பும் இப்போது எனக்கு அச்சமூட்டுவதாக இல்லை. இப்போதாயினும் என்னைப் புரிந்திருப்பீர்களென நம்புகிறேன். எனவே தேடிக்கண்டு பிடிக்கும் முயற்சியைக் கைவிடுவீர்களென்ற நம்பிக்கை கொள்கிறேன்.

அம்மாவையும் உடம்பைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளச்சொல்லுங்கள். அம்மாவின் விருப்பப்படியே மாமா என்னைக் கனடாவுக்கு அழைத்துக் கொண்டிருந்தால் அந்தப் பிரிவை அவர் எப்படித் தாங்கிக்கொள்வாரோ அதேபோல இந்தப் பிரிவுத் துயரையும் ஜீரணித்துக் கொள்ளும்படி அம்மாவிடம் பணிவாக மன்றாட்டமாகவேண்டுகிறேன். நாமனைவரும் ஒன்றாகக் கூடி குதூகலித்திருக்கும் காலம் வரும்வரையில் நாம் வாழ்வது சாத்தியமானால் அப்போது நேரில் சந்திக்கலாம். அத் தருணத்தில் நேரில் பேசவும், சுவைக்கவும், ஒவ்வொருவரிடமும் ஏராளமான அனுபவங்கள் ஒங்கிப் பேசியிருக்கும் என நம்புகின்றேன்.

இப்படிக்கு
உங்களின் மகன் ஆனந்தன்

என்று எழுதிக் கையெழுத்திட்டு நிமிரும் போது நேற்றைய இரவுத்தாக்குதலில் காயப்பட்ட நம்மவர்களைச் சுமந்து கொண்டு ஒருவாகனம் முகாம்வாசலைக் கடந்து உள்ளே வந்தது. சிந்தப்பட்ட இந்த இரத்தங்களுக்குப் பழி வாங்கியே ஆகவேண்டும்என்ற ஆவேச உணர்வு மேலிட கடிதத்தை உறையில் போட்டு மூடினான் ஆனந்தன்.

**இளையவன்**

இந்தச் சிறுகதை தமிழீழ விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் வெளியிட்ட முத்தமிழ்விழா மலரில் இருந்து நன்றியுடன் பெறப்பட்டதாகும்.



# நான் ஒய்வதற்கல்ல

கவிதை

உங்களுக்கும் சேதி கூறவேண்டும்
விடுதலையின் ஞானத்தை
எழுதிடவும் வேண்டும்.

எனது பணிமுடிக்கக் கடுவலாய்
நாலு இரவு பகல்
தூங்காத விழிகளில்
இமைகள் விழுத்தவும் பாரய்க் கடுக்கிறது
இரத்தம் கன்றி
நோவெடுக்கிறது.

என்னுடைய தோழர்
இன்னொரு போர்முனையில் பொருதுகிறார்
இங்கு
இருபது பேரே எழுபது பேரின்
சுமையைத் தூக்கியுள்ளோம்.

நாலு இரவு பகல்போல
நீடு நாம் ஓயவிலலை
சோழகப் புழுதியிறைப்பும்
கோடைப் புழுக்கமும்
பெருகவெடுத்துப் மீன்வாட்டும் பசியும்
நம்மிடம் தோல்வி.

ஏரியின் உப்பு நீரைக் குடிக்கின்றேன்.
எனது தோழன்
நேற்றுச் சிந்திய குருதியின் ஈரத்தில்
இதயம் கனலக் காவலிருக்கின்றேன்.
குறித்துக் கொள்ளுங்கள்
எதிரி வருவான்
எக்கணமும்
என உயிரை; என் தோழரை
உங்களைக் கொல்லுவதற்கு
வெறி பிடித் தவன்வரலாம்

நகர்ந்தால்
நான் நின்ற நிலத்தில்
எதிரியின் காலடியிருக்கும்
எல்லா இடத்திலும்
அவன் வைத்த தீச்சுவடிருக்கும்
சற்று என் துப்பாக்கியை
தூக்கி நில்லுங்கள்
நான் ஓய்வதற்கல்ல
கொதித்துக் கொத்து
கணையாகும் உணர்வினை
இரத்தம படிந்த வாழ்வின்
விடுதலை ஞானத்தை
எழுத வேணடும்
உங்களுக்குச் சேதி கூறவேண்டும்.

-கருணாகரன்

# வல்லிபுரம் பொற்சாசனமும் தமிழர் தம் பண்பாடும்

## அறிமுகம்

கடந்த சில மாதங்களாக இத்தீவின் தேசியப் பத்திரிகைகள் மட்டத்தில், புராதன நகரங்களுள் ஒன்றான வல்லிபுரத்தினைப் பற்றிய பல கட்டுரைகள், செய்திகள் என்பன பிரசுரிக்கப்பட்டு வருவதனைக் காண்கிறோம். செய்திகள் இலங்கைவரலாற்று ஆசிரியர்களிடமிருந்தும், தொல்லியல் ஆய்வாளர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டவையாகவுமுள்ளன. இவ்வாறு திடீரென வல்லிபுரத்தின் மகிமையை தேசிய மட்டத்திலான பத்திரிகைகள் பிரசுரம் செய்வதற்கான காரணங்கள் இன்று பலவாகும். அவற்றுள் ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் சமகால அரசியல் பிரச்சினையும் அதன் கூர்ப்படைந்த நிலையுமாகும்.

சமகால அரசியற் பிரச்சினைகளுக்கும் வல்லிபுரத்திற்குமிடையிலான தொடர்பு எத்தகையது எனப்பார்க்கும் பொழுது, அவற்றின் ஊடாக சில நிகழ்வுகளை அவதானிக்க முடிகிறது. இற்றைக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் தற்போது வல்லிபுரம் விஷ்ணு ஆலயம் அமைந்துள்ள பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் ஒரு சிறிய பொற்சாசனமே அத்தொடர்புக்குரிய நிகழ்வாக அமைகின்றது. இதனை விட வேறுசில அம்சங்கள் அத்தொடர்புக்குரியனவாக எடுத்துக் காட்டப்படுகின்றன. ஆனாலும் அச்சிறிய பொற்சாசனத்தில் காணப்படுகின்ற வாசகம் காரணமாகவே அது வடபகுதியில் பெரும்பான்மையோரின் ஆதிக்க வாதத்திற்கு சான்றாக அமைந்து விட்ட தன்மை காரணமாக, மீண்டும் வல்லிபுரத்தின் பழமை மெருகூட்டப்பட்டு புதுப்பிக்கப்படுவதனைக் காணலாம்.

### பொற்சாசனம்: ஒரு சிறிய பிராமிப்பதிவேடு

1936-ம் ஆண்டில் வல்லிபுரம் விஷ்ணு கோயிலின் தர்மகர்த்தாவாகவிளங்கிய பிரபுலோலியைச் சேர்ந்த இராசா என்பவரது கையில் 'இச்சாசனக்குரிய' பொற்சாசனம் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. மேற்படி கோவிலினுள் ஒரு மண்டபம் அமைப்பதற்காக வேண்டி மண்மேடு ஒன்றினைச் சமச்சீர் செய்ய முனைந்த பொழுது இப் பொற்சாசனமும், அதனுடன் கூடியிருந்த தங்கத்தினாலான தாமரைமலர்வடிவங்களும் பிறபொருள்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஓர் அங்குல அகலமும், 3·5 அங்குல நீளமும் கொண்ட இப்பொற்றகடானது பிராமி வரிவடிவத்தில் பொறிக்கப்பட்டிருந்தது. இது அக்காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக விளங்கியிருந்த செ. பரணவிதான அவர்களுக்குவண. தேரோ வ. ராகுல என்பவர் மூலமாக கொடுப்பிக்கப் பட்டு வாசிக்கப்பட்டது. பரணவிதானவினால் அப் பொற்சாசனம் படப் பிரதி எடுக்கப் பட்டதன் பின்னர் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டும் விட்டது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் பரணவிதான அப்பொற்றகட்டினைக் கொள்வனவு செய்வதற்கு முயற்சிசெய்தபொழுது அது பலனளிக்காமல் போய் விட்டது என்று மனவருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளமையையும் காணமுடிகிறது.

பரணவிதான இப்பொற்சாசனத்தினை சிங்களப் பிராமி வரிவடிவத்திற்குரிய ஒலிக்குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டே வாசித்துள்ளார். இவர் தனது வாசிப்பினையும், அச்சாசனத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினையும் எபிகிரபியா சிலனிக்கா (Epigraphia Zelanica) 4ம் தொகுதியில் வெளியிட்டுள்ளார். அன்று வல்லிபுரம் பொற்சாசனத்தினைப்பற்றி பரணவிதான வாசித்துக் கொடுத்த விளக்கத்திலிருந்து எந்தவிதமானமாற்றமுமின்றி அதனையே இன்றுவரைக்கும் தென்னிலங்கை ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் எடுத்துக் கையாள்வதனையும், மேற்கோள் காட்டுவதனையும், பிரசாரத்துக்காகப் பயன்படுத்துவதனையும் காணமுடிகிறது.

எபிகிரபியா சிலனிக்காவில் வல்லிபுரம் பொற்சாசனத்தைப்பற்றிக் கொடுக்கப்பட்டுள்ள வாசிப்பினையும் குறிப்பினையும் வாசகர்கள் மீண்டும் இங்கு நோக்குவது அவசியமாகின்றது.

> கூர்ப்படைந்த இனப் பகைமைகளின் மத்தியில் வரலாற்றுச்சான்றுகாட்டி அல்லது பழமையைக்காட்டி தமது பலத்திற்கு வரலாற்றுப் பாலம் போட முயல்கின்ற சிங்கள- பௌத்த பேரினவாதத்திற்கு ஊடகமாகஇன்றுவல்லிபுரம் பொற்சாசனம் உட்பட்டு விட்டது என்பது நியாயமற்றதாகவே இன்று தோன்றுகின்றது. ஏனெனில் வல்லிபுரம் பொற்சாசனம் தொடர்பாக ஒரு சில மாறுபட்ட கருத்துக்கள் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டிருப்பினும் கூட இன்றைய நிலையில் மேலுமொரு முக்கியமான கருத்தினை கருதுகோளாகவாவது முன்வைக்க முடிகிறது. அதாவது வல்லிபுரப் பொற்சாசனத்தில் 'மணிபல்லவம்'என்ற இடப்பெயர் பொறிக்கப்பட்டிருப்பதனை அடையாளம் கண்டு கொள்வது என்பதாகும்.

### பரணவிதானவின் சாசன வாசிப்பு:

வரி I மஹாராசா வஹபஹ ரஜெஹி அமெத சித்தம்

வரி II இஸிகிரயே நகதிவ புஜமெனி

வரி III படகர - அதனெஹி பியகுக - திஸ

வரி IV விஹார கரிதே

### பரணவிதான கொடுத்துள்ள இச்சாசனத்தின் பொருள்:

நன்மையுண்டாகுக!

1. வசப மஹாராசாவினது ஆட்சிக்காலத்தில் அமைச்சனான
2. இஸிகிரயே என்பவன் நாகதீபத்தினை நிர்வகித்த பொழுது
3. படகர - அதனவில் பியகுதிசன் என்பவன்
4. விகாரை அமைத்தான்

அதாவது இச்சாசனத்தில் குறிப்பிடப்பட்ட மன்னனான வசப மஹாராசாவின் ஆட்சிக்காலமானது கி. பி. 1 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தது எனவும், இக்காலகட்டத்தில் நாகதீபம் என அழைக்கப்பட்ட யாழ்ப்பாணம் உட்பட இலங்கைத்தீவு முழுவதும் ஒருகுடைக்கீழ் (Unitary State) ஆளப்பட்டது எனவும் யாழ்ப்பாணத்தினை அம் மன்னனது அமைச்சர்களுள் ஒருவனான இஸிகிரயே என்பவன் நிர்வகித்திருந்தான் எனவும் பரணவிதான விளக்கம் கொடுத்துள்ளார். மேலும் இச்சாசனம் குறிப்பிடும் இரண்டாவது செய்தியாகவே பியகுக- திச என்பவனால் படகர அதன என்றழைக்கப்படும் இடத்தில் விகாரை ஒன்று கட்டப்பட்டது என்பது எடுத்துக்காட்டப்படுகின்றது.

### பிரச்சினைக்குரிய அடிப்படை:

இப்பொற்சாசனம் கண்டுபிடிக்கப்பட்டு பலவருடங்களைக் கடந்தும்,இன்றைய நிலையில் அதனைப் பற்றிய ஆய்வில் புத்தூக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளமையையும் மறுப்பதற்கில்லை. தென்னிலங்கையில் இருந்து இச்சாசனத்தினைப் பற்றி மிகைப்படுத்தியும், சான்று காட்டியும் கட்டுரைகளை எழுதுவோர் இரண்டு காரணங்களுக்காகவே அம்முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் எனலாம்.

I இலங்கைத்தீவின் ஒற்றையாட்சி அமைப்பு முறைக்கு ஒரு சான்று காட்டல்

II நாகதீபத்தில் சிங்கள பௌத்தக் குடியிருப்புக்கள் இருந்ததற்கான ஒரு சான்று காட்டல்

இப்பொற்சாசனத்தினை மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக எடுத்துக் கையாளுகின்ற ஆய்வாளர் எவ்விதத்திலும் பரணவிதான என்பவரின் வாசிப்பிலிருந்தும்விளக்கத்திலிருந்தும் மாறுபட்டவர்களாகத் தெரியவில்லை. கூர்ப்படைந்த இனப்பகைமைகளின் மத்தியில் வரலாற்றுச் சான்றுகாட்டி, அல்லது பழமையைக் காட்டி தமது பலத்திற்கு வரலாற்றுப் பாலம் போட முயல்கின்ற சிங்கள-பௌத்த பேரினவாதத்திற்கு ஊடகமாக இன்று வல்லிபுரம் பொற்சாசனம் உட்பட்டு விட்டது என்பது நியாயமற்றதாகவே இன்று தோன்றுகின்றது. ஏனெனில் வல்லிபுரம் பொற்சாசனம் தொடர்பாக ஒருசில மாறுபட்ட கருத்துக்கள் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டிருப்பினும் கூட இன்றைய நிலையில் மேலுமொரு முக்கியமான கருத்தினை கருதுகோளாகவாவது முன்வைக்க முடிகிறது. அதாவது வல்லிபுரப் பொற்சாசனத்தில் 'மணிபல்லவம்' என்ற இடப்பெயர் பொறிக்கப்பட்டிருப்பதனை அடையாளம் கண்டுகொள்வது என்பதாகும்.

### பொற்சாசனத்தில் மணிபல்லவம்

எமது மறைந்த திராவிடப் பாரம்பரியம் ஒன்றின் அடையாளத்தினை வல்லிபுரத்திற் கிடைத்த பிராமிப் பொற்சாசனமூடாக வெளிப்படுத்துவதற்கு உதவியாக இருக்கின்ற ஒரேயொரு ஆதாரம் அச்சாசனத்தில் இடம்பெறுகின்ற 'மணிபடகர அதன' என்ற தொடராகும். பரணவிதானவின் வாசிப்பில் 'மணி' என்பது 'புஜமெனி' என்ற சொல்லில் உள்ள 'மெனி'யில் மறைந்து விட்டது. 'படகர அதனகி' என்பது சரியாக வாசிக்கப்பட்டுள்ளது.

'படகர அதன' என்ற தொடரை 'பலகர அதன' எனவும் வாசிக்கமுடியும் என்பதனை சான்று காட்டலாம். 'ஆட்டன் அத்தி' என்ற குறுநிலத் தலைவனுடைய பெயர் தமிழ்நாட்டிலுள்ள தமிழ்ப் பிராமிச்சாசனத்தில் 'ஆதி' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோன்று அசோகனுடைய கிர்னார் பாறைப் பிராமிச் சாசனத்தில் சோழர் என்ற பதமானது 'சோட' என்றே வரையப்பட்டுள்ளது. அதனையொத்து வல்லிபுரம் பொற்சாசனத்தில் வாசிக்கப்பட்ட 'படகர அதன' என்பதனை 'பலகர அதன' என்றோ அல்லது 'பலகர அதன' என்றோ கொள்வதும் சாசனவியற்துறை ரீதியாக தவறாக அமையமாட்டாது. ஏற்கனவே 'புஜமெனி' என்பதில் மறைந்த மணியை 'பலகர அதன'வுடன் சேர்த்து வாசிக்கும்பொழுது அது 'மணிபலகர அதன' என எமக்குகிடைக்கின்றது அதனை 'மணிபல்லகர ஆதனம்' என்றோ அல்லது வல்லிபுரத்திற்கும் அயற்கிராமமான பல்லப்பையுடன் தொடர்புபடுத்தியோ பார்க்கமுடியும்.

பல்லப்பை என்ற கிராமப் பெயரினை மணிபல்லவத்திலிருந்தும் சிதைந்த ஒரு மருவுப் பெயராகக் கொள்ளமுடியுமாயின், மணிமேகலை கண்ட தமிழ்ப் பௌத்தப் பாரம்பரியத்திற்கும் வல்லிபுரத்துக்குமிடையிலான பழமையான தொடர்புகளை தெளிவாக வெளிப்படுத்த முடியும்.

(இந்நிலையை உறுதிப்படுத்துவதற்காக இச் சாசனத்துக்குரிய புதிய வாசகத்தினை தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகத்தில நடைபெற்ற இலங்கைப் பிராமிக் கல்வெட்டுத்தொடர்பான மாநாட்டுக்கு அனுப்பியிருந்தோம். அதைப் பற்றிய முடிவுகள் இன்னும் இங்கு வந்து சேரவில்லை.)

### மணிமேகலையும் லவல்லியும்

வல்லிபுரக் கோவிற் சாசனத்தினூடே மணிபல்லவம் பற்றிய இடப்பெயர் வாசிக்கப்படுவது ஏற்றுக்கொள்ளப்படுமானால், வல்லிபுரத்தின் தோற்றம் தொடர்பாக நிலவிக்கொண்டிருக்கின்ற ஐதீகங்களுடன் மணிமேகலையையும் ஒப்பிட்டு ஆராய முடியும். காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து நேர் தெற்காக 36 காதம் தொலைவில் நீண்ட நெடுமணற் குன்றங்களுள் அமைந்த மையமே வல்லிபுரமாகும். மணிமேகலையில் மணிபல்லவம் தொடர்பாக கொடுக்கப்பட்டுள்ள விபரணங்கள் யாவுமே வல்லிபுரக் குறிச்சி, பல்லப்பை ஆகிய பழம் பெருங் கிராமங்களின் இயல்பினை ஒத்ததாக இருப்பதனைக் காணமுடிகிறது. ஏற்கனவே மணிபல்லவத்தினை நயினார் தீவுடன் அடையாளம் கண்டு பலர் எழுதியிருந்தாலும் கூட, தற்பொழுது வல்லிபுரப் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளின் போதும் குறிப்பாக புலோலி, பல்லப்பை ஆகிய பழம்பெரும் கிராமங்களினூடே சென்று கண்ட ஆதாரங்களின் அடிப்படையிலும் எமது மறைந்ததமிழ்ப் பௌத்தப் பண்பாட்டின் பகைப்புலமான மணிபல்லவத்தின் பதிவுகளை அடையாளம் காண முயலலாம். அவ்வகையில்தக்ஷிணகைலாசபுராணத்தில் இடம்பெறும் வல்லிபுர மான்மியத்திலும் கூறப்பட்டுள்ள லவல்லி என்ற கன்னிப்பெண்ணையும் மணிமேகலை என்னும் காவியத்தில் கூறப்பட்டுள்ள பெண் துறவியான மணிமேகலையையும் ஒப்பிட்டு நோக்கி, எமது மறைந்த பௌத்த-திராவிடப் பாரம்பரிய மொன்றினை வெளிப்படுத்துமா என்பது எதிர்காலத்தில் ஆய்வாளர்களுக்கு விருந்தாக அமையும்.

### பௌத்தமும்வைணவமும்

மணிமேகலையின் சூழல் பௌத்த சமயப் பரப்பிலும், லவல்லியினுடைய சூழல் வைணவ சமயப் பரப்பிலும் எடுத்துக் கூறப்பட்டு வந்த இருமரபுகளின் பின்னணியில், பௌத்தமும் வைணவமும் சங்கமித்த ஒரு தன்மையை வல்லிபுரப்பரப்பில் காணமுடிகின்றது. இலங்கைத் தீவின் காவற் தெய்வமாக வணங்கப்பட்டு வந்த விஷ்ணு வழிபாட்டின் பின்னணியில் பௌத்தமும் வைணவமும் ஒன்று கலந்திருப்பதனைக் காணலாம். இவ்வாறு ஒன்றுகலந்துள்ள நிகழ்வானது சிங்கள மொழி யாதிக்கம்கூடிய பரப்பில் பௌத்த முதன்மையுடனும் தமிழ்மொழி யாதிக்கம் கூடிய பரப்பில் வைணவ முதன்மையுடனும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையை தொல்லியல் ஆதாரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

தெற்கே தெவுந்தரையில் உபுல்வனாகவும், வடக்கே வல்லிபுரத்திற் சக்கரஆழ்வாராகவும், கிழக்கே கதிரவெளியில் மாயோனாகவும், குடதிசையில் உடப்பில் கிருஷ்ணன் ஆகவும் வரலாற்றுக் காலம் முதற் கொண்டு இலங்கையில் விஷ்ணு வழிபாடு முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகிறது. இரண்டு பெரும் நிலைகளில் இங்கு விஷ்ணுவழிபாடு மேன்மை பெற்றிருந்தது.

செ. கிருஷ்ணராசா
M. A.
வரலாற்றுத்துறை

1. முற்றிலுமே இந்துப் பண்பாட்டுச்சூழலில் அமைந்த விஷ்ணு வழிபாடு.
2. முற்றிலுமே பௌத்தப் பண்பாட்டுச் சூழலில் அமைந்தவிஷ்ணுவழிபாடு

இந்த இரண்டு மரபுகளில் எது காலத்தால் முந்தியது எனக்குறிப்பிடுவது மிகவும் கஷ்டமாகும். இருந்தும் வட இந்தியாவினைப் பொறுத்த வரையில்கி. மு. 2 ஆம் நூற்றாண்டுக்குரிய பெஸ்நகர் கருடத்தூண் சாசனம் ஒன்றிலிருந்து வாசுதேவனுக்காக அமைக்கப்பட்ட கோயில் ஒன்றைப் பற்றி அறிய முடிகிறது. அதற்குப்பின்னர். கி. பி 3ஆம் நூற்றாண்டிலிருந்தே குபதப்பண்பாட்டின் எழுச்சியுடன் விஷ்ணுவழிபாடும்பௌத்தக்கலை மரபும் இணைந்த வகையில் பெருவளர்ச்சி அடைந்து கொண்டமையைக்காணலாம் அதன் பின்னணியில் புத்தரை விஷ்ணுவின் 10 வது அவதாரமாகக் கொள்கின்ற ஒரு மரபும் உருவாக்கப் பட்டது. இதுவே பௌத்த - வைணவ சமயங்களில் புத்தரதும் விஷ்ணுவினதும் சிற்பங்கள் ஒன்றாக இடம் பெற்றுக் கொள்வதற்குரிய காரணமாயிற்று.

இலங்கையைப் பொறுத்த வரையில் பௌத்தப் பண்பாட்டுச் சூழலில் தோற்றம் பெற்ற விஷ்ணுவழிபாடே காலத்தால் முற்பட்டதாகவும், இந்துப்பண்பாட்டுச் சூழலில்அமைந்த விஷ்ணு வழிபாடு சற்றுப் பிற்பட்டதாகவும் கொள்ளமுடியும். யாழ்ப்பாணத்தினைப் பொறுத்தமட்டில் வல்லிபுரம், கந்தரோடை, புத

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அழகான, அமைதியான திருமலையை ஏகாதிபத்தியங்கள், ரணகளமாக்கின

ஐக்கிய இராச்சியத்தின் (பிரிட்டனின்) பதில் பிரதிநிதியாக இலங்கையிலிருந்த திரு. பி. எம் குரோஸ்த் வேய்ட் அவர்களால் திருக்கோண மலையிலிருக்கும் றோயல் கடற்படைத்தளம் 1957 ஒகடோபர் 15ஆம் திகதியன்று இலங்கை அரசாங்கத்திற்கு கையளிக்கப்பட்டது. இதனை யொட்டி 1957 ஒக்டோபர் 10ஆம் 17ஆம் திகதி களில் ஈழகேசரி இதழில் வெளிவந்த கட்டுரையை இங்கு காணலாம். கௌத். ஜே. சோம நாதர் என்பவரால் இக் கட்டுரை ஈழகேசரிக் கென எழுதப்பட்டிருந்தது.

திருக்கோணமலை கடற்படைத் தளம் திருக்கோண மலைத் துறைமுகம், வங்காள விரிகுடாவை எதிர்நோக்கியும் இந்தியாவின் கிழக்குக் கரை யோரத்துக்கு நேராகவும் இருக்கிறது. இத் துறைமுகத்தின் வடிவமைப்பு சிராகவில் லாதிருப்பதோடு அதன் முகப்பிலுள்ள ஏராளமான சிறுசிறு வளைவுகள் ஒருமனோரம்மிய மான காட்சியாகும். இதனாற்றான் உலகிலுள்ள மிகவும் அழகு வாய்ந்த இயற்கைத் துறைமுகங்களில் திருக்கோணமலையும் ஒன்றாகப் புகழப்படுகிறது

ஏகாதிபத்தியத்தை உருவாக்கிய கிழக்கத்திய நாடுகளின் செழிப்பான வர்த்தகத்தின் ஏகபோக உரிமையைக் கைப்பற்றப் பாய்க்கப்பல்கள் கடல்களில் அங்குமிங்குமாக விரைந்துசென்றுகொண்டிருந்த காலத்தில் திருக்கோணமலை உண்மையில் ஒரு வர்த்தகத் துறைமுகமாகவேயிருந்தது.

மேனாட்டினர் திருக்கோண மலையைக் கண்டுபிடித்து ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலம் சென்றபின்கூட அப் பிரதேசம் தன் பழைமையான அமைதி கலையாது உறங்கிக் கொண்டிருக்கும் ஓர் இடமாகவேயிருந்ததுஎன்று ஆர்.எல். புரோகியர் சுட்டிக்காட்டுகிறார். இலங்கையின் மேற்குக் கரை, தெற்குத் துறைமுகங்களிலிருந்து கறுவா, மிளகு, கஸ்தூரி, யானைத் தந்தம், முத்து என்பனவற்றைப் போர்த்துக்கீசர் தமதுபிரமாண்டமானபீரங்கிகளின் நிழலிலே சப்பல் கப்பலாக ஏற்றிக்கொண்டிருந்த காலத்திற்கூட திருக்கோணமலைத்துறையின் நீர்ப்பரப்பு சலனமின்றித் துயின்று கொண்டேயிருந்தது.

புரோகியர் மேலும் கூறுகிறார்; போர்த்துக்கீசரின் கொடிகளின் நிழலில் போர்த்துக்கீச மன்னரின் ஏகபோக வர்த்தக உரிமைகளான இப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுக்கொண்டிருக்கையில் ஒல்லாந்தர் தம் சுப ஆட்சியை நிலைநாட்ட வர்த்தக நாவாய்களையும், போர் நாவாய்களையும் மிகவும் வியப்பூட்டும் வகையில் வேகமாகத் தயாரிக்க ஆரம்பித்தனர்.

கிழக்குத் திசையில் ஒல்லாந்தர் ஆதிக்கம் அதிகரித்தமையால் கீழ்த்திசையின் மணமகள் என்று வர்ணிக்கத்தக்க இலங்கை வர்த்தகத்தைத் தமதாக்கிக் கொள்ளும் போட்டி இங்கு வலுப்பெறறது.

இந்தப் போட்டா போட்டியின் காரணமாகத் திருக்கோணமலையைப்பலநூற்றாண்டு காலமாகச் சுற்றிக்கிடந்த அமைதி என்னும் மெல்லிய திரை கிழிந்துபோயிற்று. ஆகவே போர்த்துக்கீசர் மிகத்தீவிரமான வேகத்துடன் இலங்கையின் கரையோரத்திலிருந்த தமது முக்கியமான இடங்களையெல்லாம் பலப்படுத்திக் கோட்டை கொத்தளங்களை அமைத்தனர். ஆயிரங்கால்கோயிலை இடித்தனர். அதன் அழகொழுகும் சிற்பங்களையும் தூண்களையும் திருக்கோணமலைக் கோட்டையை அமைக்க உபயோகித்தனர்.

அன்றுதொடக்கம் திருக்கோணமலை ரணபூமியாயிற்று. ஆட்சிவெறியும் பேராசையும் ஒபாதுமுட்டி மோதும் யுத்தகளமாயிற்று. அதுமுதல் திருக்கோணமலை ஒருமுக்கியமான நாவாய்த்தளமாக விளங்கிவந்தது. சீனரும், இந்தியரும் அராபிக் கரையோரத்தினரும் இங்குபடையெடுத்து வந்திறங்கியிருக்கிறார்கள். பிரெஞ்சுக் கொடிகூட ஒரு வருடத்துக்குச் சற்றுக்குறைவாக இத்திருக்கோணமலை துறைமுகத்தின் மீது பறந்து கொண்டிருந்தது

முதலாவது ஐரோப்பியர்கள் இத்திருக்கோணமலைத் துறைமுகத்துக்கு ஆயத்தஞ் செய்து வரவில்லை; ஆகஸ்மாத்தாக வந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. போர்த்துக்கீசரான லொறன்சோ அல்மேதாவும் அவருடைய மூன்று கப்பல்களும் மாலை தீவை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் கப்பல்கள் ஓர் நீர்ச்சுழியிற் சிக்கித்திசை மாறி இலங்கையை வந்தடைந்தன. அதன்பின் 1601ஆம் ஆண்டு ஜோரிஸ் வானஸ் பீல்பேர்க் என்னும் டச்சுக் காரன் ஒல்லாந்திலிருந்து இலங்கையோடு வர்த்தகத் தொடர்பேற்படுத்த இங்கு வந்தான். பதினோராண்டுகள் கழிந்தபின் மார்சலஸ் டி பொஸ்கூட்ர் கண்டிக்கு வந்து கண்டியரசனோடு ஒரு ஒப்பந்தமும் எழுதிக்கொண்டான். இதன் பிரகாரம் டச்சுக்காரர் திருக்கோணமலையிருக்கும் கொட்டியாரம் என்னும்இடத்தில் ஒரு கோட்டை அமைக்க அனுமதிக்கப்பட்டனர். இதை

(7ஆம் பக்கம் பார்க்க)

## வல்லிபுரம்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னூர் ஆகிய மையங்களில் காணப்பட்ட விஷ்ணு மரபு காலத்தால் முற்பட்ட அம் மரபினைச் சேர்ந்ததாகும். புத்தூரில் இருந்து கருங்கல்லினால் ஆன விஷ்ணு சிற்பம் ஒன்று கிடைத்துளது. கந்தரோடையில் இருந்து 'விஷ்ணு பூஷிதய' என்ற பிராகிருத வாசகம் பொறிக்கப்பட்ட கார்னேலியன் முத்திரை பெற்றுக்கொள்ளப்பட்டது. வெண்கலத்திலான ஹனுமார் சிற்பமொன்றும் கந்தரோடையிலிருந்து பெற்றுக்கொள்ளப் பட்டமை இங்கு குறிப்பிடத் தக்கது.

முற்றிலுமே இந்தப் பண்பாட்டுச்சூழலில் அமைந்த விஷ்ணு வழிபாடானது அனுராதபுரம், பொலனறுவை, உடப்பு, கதிரவெளி ஆகிய மையங்களில் காணப்பட்டிருந்தன. இதற்கான தொல்லியற் சான்றுகளும் கிடைத்துள்ளன. பொலனறுவையில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட 13 இந்துக்கோயில்களில் ஐந்துவிஷ்ணு கோயில்கள் எனபது இங்கு குறிப்பிடத்தக்கது. இதே போன்று கந்தளாயிலும் இந்துப் பண்பாட்டுச் சூழலில் அமைந்த விஷ்ணு கோயில் ஒன்று இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. கந்தளாய் சோழர் காலத்தில் ஒரு பிராமணக்குடியிருப்பாகவும் (சதுர் வேதி மங்கலம்) விளங்கியிருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. மிகவும் அண்மைக் காலத்தில் கிளிநொச்சியில் உள்ள வட்டக்கச்சியில்காணப் பட்ட புராதன இந்து ஆலய மொன்றின் சிதைவுகள் 'மாயவனூர்' என்ற அவ்வூரின் பெயருக்கேற்ப, விஷ்ணு கோயில் ஒன்றுக்குரியதாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இவ்வாறு ஈழத்து விஷ்ணு வழிபாட்டுமரபின் அடிப்படைகளானவை பௌத்த- இந்துப் பாரம்பரிய நடைமுறைகளுடன்இணைக்கப்பட்டிருந்ததன் காரணமாக தற்போதைய சர்ச்சைக்குரிய முரண்பாடுகள் தோற்றம் பெறுவதற்கு வழி வகுக்கப்பட்டது. இந் நிலையில வல்லிபுரத்தில் தற்போது மேலாதிக்கம் பெற்ற விஷ்ணு வழிபாடும்அதற்குமுன்னர் மேலாதிக்கம் பெற்றிருந் திருக்கக் கூடிய மணிமேகலை கண்ட பௌத்த வழிபாடும் இரண்டும் தமிழ்ப்பாரம்பரியப் பரப்பிலேயே மக்களின் ஆதரவினைப் பெற்றிருக்கவேண்டும். இது ஆந்திரா - தமிழகப் பண்பாட்டுப் பின்னணியில் அதன் தாக்கத்திற்குள் வல்லிபுரமும் உட்பட்டிருந்தமையினையே எடுத்துக்காட்டுகின்றது ஆந்திரப்பண்பாடு முதலில்பௌத்தப்பாரம் பரியத்திலும் பின்னர் வைணவப் பாரம்பரியத்திலும் வளர்ச்சி பெற்றிருந்தது அதேபோன்று வல்லிபுரம் என்ற மையத்தின் பாரம்பரியமும் முதலில் (தமிழ்)பௌத்த மரபிலும் பின்னர் வைணவ மரபிலும் தழைத்து வருகின்றது.

ஆந்திரப் பண்பாட்டுச்செல்வாக்கினை பிரதிபலித்து நிற்கும் வல்லிபுரபொற்சாசனம் அதன் வரிவடிவ அமைப்பில் கி. பி. 4ம் நூற்றாண்டுக்குரிய பண்பினை உணர்த்தி நிற்கின்றது என பேராசிரியர் வேலுப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். வல்லிபுரக் கோயிற் பிராந்தியத்தில் பெற்றுக் கொள்ளப் பட்ட மட்பாண்டத் துண்டுகளை ஆராய்ந்த கலாநிதி பொ. இரகுபதியும் அவற்றின் காலவரையறையை வேலுப்பிள்ளையின் காலக் கணிப்புடன் இயைவாகக் காட்டுகின்றார். எனவே முதலில் ஆந்திரச் செல்வாக்கிற்குட்பட்ட வல்லிபுரமானது பின்னர் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருந்த பக்தி இயக்கத்திற்குப் பின்னர் கி பி 8ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து வைணவ வழிபாட்டின் மேலோங்கிய மரபிற்குட்பட்டது எனலாம். ஆந்திராவில் பௌத்தத்துடன் பின்பற்றப் பட்டிருந்த 'சக்கர வழிபாடு' இக்கட்டத்தில் மக்களுடைய கவனத்தினை ஈர்த்திருக்கக் கூடும். மணிமேகலையில்வரும் மணிபல்லவக் காதையில்இடம் பெறும்.

''பொன் அணி நேமி வலம் கொள் சக்கரக்கை
மன்னுயிர் முதல்வன்''


என்ற தொடரானது வல்லிபுரத்தினைப பொறுத்தவரையில் பௌத்த வழிபாட்டுடன் இணைந்திருந்த சக்கர வழிபாட்டினை எடுத்துக் காட்டுவதாகக் கொள்ளலாம்.

எனவே மேற்கூறப்பட்ட விளக்கங்களின் உடன்பாடு பாவும் வல்லிபுரம் பொற்சாசனத்தின் ஊடாக மணிபல்லவம் என்ற இடப் பெயரினை வாசிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சியின் அங்கீகாரத்திலேயே தங்கியுள்ளது. அவ்வங்கீகாரம் இம் முயற்சிக்கு கிடைக்கப்பெறுமானால் வல்லிபுரம் என்றபுராதனமையத்தின் வரலாறானது மிகவும் நீண்டதாகவும் அதனூடே திராவிடப் பாரம் பரியத்தினை தொடர்ச்சியாகக் கொண்டிருந்த தன்மையையும் உறுதிப் படுத்த முடியும்.

### முடிவுரை:

வல்லிபுர விஷ்ணு ஆலயம் அமைந்துள்ள சுற்றாடல் நெய்தலும்மருதமும் மயங்கிய நிலையில் உள்ள ஆய் அல்லது ஆயர்பாடியாகக் காணப்படுகிறது பொற்சாசனம் புதைந்து காணப்பட்டமையமும் ஆயர்பாடியாகவே உள்ளது. (பொற்சாசனத்தில் இடம் பெறும் இஸிகிரயே என்ற பெயர்வழி ஒரு வேளை இஸிகிர்ஆய் என முன்பு குறிப்பிடப்பட்டிருக்கலாம்.) பேராசிரியர் வேலுப்பிள்ளை குறிப்பிடுவது போன்று, இன்று வரைக்கும் ஆயர் பாடிக்கிராமம் பண்பு அங்கு நிலை பெற்று வருவதனை அவதானிக்கலாம். மணிபல்லவக் காட்சிகளில் இத்தன்மை நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆபுத்திரன் கதை இதற்குச் சிறந்த வொரு எடுத்துக்காட்டாகும். எனவே இத்தகைய ஒரு பிராந்தியத்தில் விஷ்ணு வழிபாட்டு மரபு ஒன்று நீண்டகாலமாக இருந்துவந்து பிற்காலக் கட்டத்தில் மிகப் பிரபல்யம் பெற்றது எனலாம். அதற்கு முன்னர் மணிமேகலை காட்டும் மணிபல்லவமாக மலர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 'வல்லிபுரம்' என்ற புராதன நகரம் மணிமேகலை குறித்து நிற்கும் மணிபல்லவமே'' என்ற கருத்தினை இற்றைக்குப் பல தசாப்தங்களுக்கு முன்னர் 'வரகவியாகவும் நுண்மான் நுழைபுலம் மிக்கவராகவும்' விளங்கிய கந்தமுருகேசனார்முன்வைத்திருந்தார் என்பது இங்கு சுட்டிக் குறிப்பிடத்தக்கது.


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. மச. திருநாவுக்கரசு
(சமாதான நீதவான், முன்னைநாள் பருத்தித்துறை சிங்கர் கொம்பனி முகாமையாளர், முன்னைய உடுப்பிட்டி கிராமசபைத் தலைவர்)

அன்னை மடியில்: 15. 07. 1920
ஆண்டவன் அடியில் 12. 07. 1987

திதி: 28. 06. 1991

பாசத்தின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய்
நேசத்தைக் காட்டி எமை வளர்த்த ஐயா!
கண்ணை இமை காப்பது போன்று
காலமெல்லாம் எமைக் காத்தீர்!
விண்ணைக் காப்பதற்கோ - எமை விட்டு
விரைவாக சென்றுவிட்டீர்!
அன்னியப் படைகளின் அட்டகாசத்தால் -- அன்று
உமது உயிர் பிரிந்தது -- இல்லை
பிரிந்திட்டார் உம்மை எம்மிடமிருந்து
இரக்கமில்லா இலங்கை அரக்கர்கள்
நான்கு ஆண்டுகள் ஆயினும் -- நாம்
மறவோம் உம் நாமத்தை -- எம்
நினைவெல்லாம் நீங்கள் ஐயா! என்றும்
நீங்காது இடம்பெறுவீர்... உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கும் உங்கள்
மனைவி மக்கள்,
கரணவாய் வடக்கு, மருமக்கள், பேரப்பிள்ளைகள்
கரவெட்டி.
(R-1491)

# இலங்கை ஒருமைப்பாட்டை இந்தியாவால் தொடர்ந்தும் பேண முடியுமா?

தமிழீழப் போராட்டம் இன்று குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. அதிலும் இப்போராட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் விடுதலைப் புலிகள் இன்று உலகின் முன்னணிப் போராளிக் குழுவாகக் கணிக்கப்படுகின்றார்கள். துணிகரம் மிக்க இவர்களின் தாக்குதல் அவர்கள் எதிர்த்துப்போராடும் சிறிலங்கா அரசிற்குப் பெரும் இராணுவ பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளதோடு நிலை தடுமாறவும் செய்துள்ளன.

ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டம் தனியாக சிறிலங்காவுடன் மட்டும் தொடர்புடைய போராட்டமல்ல; இது உலக நாடுகளின் எண்ணிக்கையில் மேலும் ஒன்றைக் கூட்டுவதற்கான போராட்டமாகையால் உலக நாடுகள் சகலவற்றுடனும், குறிப்பாக தென்னாசியாவுடனும் நெருங்கிய தொடர்புடைய போராட்டமாகும். ஆகையினால் சர்வதேச அரசியற் சூழ்நிலைகள், தென்னாசிய அரசியற் சூழ்நிலைகள் என்பனவும் இப்போராட்டத்தை வெகு அழுத்தத்திற்கு உள்ளாக்கியுள்ளன.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக முனைப்படைந்த போது போராட்டத்திற்கு இந்தியாவின் அங்கீகாரம் கிடைக்கும். பங்களாதேஷ் போன்றதொரு நிலையில் தமிழீழம் உருவாகும் என தமிழ் மக்களில் பெரும்பான்மையினர் நம்பினர். ஆனால் இந்தியாவின் நிலைப்பாடு அவ்வாறானதொரு நிலையில் இருக்கவில்லை. இலங்கைத்தீவிற்குள் இருநாடுகள் உருவாவதை இந்தியா விரும்பவில்லை.

ஆனால், இலங்கைத்தீவில் இந்தியாவின் உதவியுடன் தமிழீழம் ஒன்று உருவாகிவிடுமோ என்ற அச்சம் சிறிலங்கா தலைவர்களிடம் போதியளவில் இருந்தது. 'தமிழர் உலகில் ஒரு பலம் பொருந்திய சிறுபான்மை இனம். அவர்கள் விடயத்தை மிகவும் அவதானமாகவே கையாள வேண்டும்' எனக் குறிப்பிட்டார் முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா. அவர் உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழரையும் குறிப்பாக இந்தியாவில் உள்ள தமிழரை அடிப்படையாகக் கொண்டே இவ் அச்சத்தை வெளியிட்டார்.



ஜே. ஆர். ஜெயவர்த்தனா

ஆனால் இந்திய ஆளும் வர்க்கமும் உலகில் தமிழர் ஒரு பலம் பொருந்திய சிறுபான்மை இனம் என்பதை மறக்காமலே தமது கொள்கை வகுப்பை மேற்கொண்டது. தனது நாட்டில் ஐந்து கோடிக்குமேல் வாழும் தமிழர்களுக்கு அண்மையில் ஒரு தனித்தமிழ் இராச்சியம் என்பதை இந்திய ஆளும் வர்க்கத்தினால் அங்கீகரிக்க முடியவில்லை.

அதேவேளை உலகத்தமிழர்களின் தலைவர்கள் என தம்மை பிரகடனப்படுத்திக் கொண்டிருந்த தமிழக அரசியல் தலைவர்களினாலும் உலகத் தலைமை முப்பத்திஐந்து லட்சம் மக்கள் வாழும் ஒரு நாட்டிடம் செல்வதை அங்கீகரிக்க முடியவில்லை. இதன் காரணமாக உலகில் ஒரு தனித்தமிழ் அரசாக இலங்கையில் தமிழீழம் அமைவதை அவர்கள் பெரிதாக விரும்பியதாக இல்லை.

அதேவேளை பெரும் நெருக்கடிகளின் மத்தியில் சிறிலங்கா அரசும் இந்திய ஆளும் வர்க்கமும் எதிர்பார்த்ததை விட போராட்டம் வளர்ச்சி கண்டது. இரத்தம் சிந்துதல் மூலம் போராட்டத்தில் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டு வந்தது.

இவ்வேளை 1987 ஆம் ஆண்டு இலங்கையின் இனப் பிரச்சினை விவகாரத்தில் இந்தியா நேரடியாகத் தலையிட்டது. சிறிலங்கா அரசாங்கத்துடன் ஒரு சமரச உடன்படிக்கையைச் செய்து கொண்டது. தமிழரின் இனப் பிரச்சினை தீர்வுக்கென செய்யப்பட்ட இவ் ஒப்பந்தத்தில் தமிழரின் தாயகம் என்ற அடிப்படைப் பிரச்சினையே ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் இவ் ஒப்பந்தத்தால் தமிழர் பிரச்சினை பெருமளவில் தீர்க்கப்பட்டது என இந்தியா பறைசாற்றிக் கொண்டது

ஆனால் இவ் ஒப்பந்தத்தால் தமிழருக்கு எந்தவித லாபமும் கிடைக்கவில்லை என இராஜதந்திரிகள் பலர் உட்பட அநேகர் கருத்து வெளியிட்டனர். இவ் ஒப்பந்தம் புலிகளாலும் நிராகரிக்கப்பட்டது. புலிகள் இந்தியப் போர் மூண்டது.

இவ் ஒப்பந்தம் பற்றி முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் வெங்கடேஸ்வரன் அப்போது குறிப்பிடுகையில் வண்டியின் முன்னால் கட்டப்படவேண்டிய மாட்டை பின்னால் கட்டியது போன்ற ஒப்பந்தம் எனக் குறிப்பிட்டார். அண்மையில் கொழும்பில் இது தொடர்பாக மேலும் ஒரு பேட்டியில் அவர் குறிப்பிடுகையில் இவ் ஒப்பந்தம் செல்வநாயகத்தின் உடன்படிக்கை ஏற்பாடுகளிலும் பார்க்க கணிசமான அளவில் குறைவாகவே உள்ளது. சமாதான உடன்படிக்கையில் உள்ள ஏற்பாடுகள் செல்வநாயகத்தின் உடன்படிக்கையில் ஏற்கனவே உள்ளன எனத் தெரிவித்தார்.

அதாவது தமிழர் தமது உரிமைக்காகப் பெருமளவில் இரத்தம் சிந்தப்பட்ட பின்னர் இந்திய ஆளும் வர்க்கம் குறிப்பாக அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி வைத்த தீர்ப்பானது பிரச்சினைக்கு சிறிதளவேனும் தீர்வு காணக் கூடியதாக இருக்கவில்லை. ஆனால் தமிழரை பின்னோக்கித் தள்ளியது.

சமஷ்டி ஆட்சி அமைப்பு என்ற பேரில் மத்திய அரசாங்கத்திடம் அதிகாரங்கள் குவிந்து கிடக்கும் இந்திய அரசியலமைப்பை ஒத்த ஒரு அமைப்புக்கூட ஏற்படுத்த முயற்சிக்கப்படவில்லை. பலம் பொருந்திய சிறுபான்மை இனம் என்ற அடிப்படையில் தமிழரை ஒடுக்கும் ஒரு ஒப்பந்தமாக அவ் ஒப்பந்தம் அமைந்தது.

ராஜீவ் காந்தி - ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு இடையில் ஏற்பட்ட இவ் ஒப்பந்தமானது இலங்கையின் ஒற்றையாட்சி முறையில் நின்றும் பிரதேச ஒருமைப்பாட்டில் இருந்தும் தமிழரை எந்த விதத்திலும் நகராமல் செய்ய முற்பட்டது

ராஜீவ் காந்தி இலங்கையின் ஒருமைப்பாட்டில் தீவிர கவனமாக இருந்தார். அதனை ராஜீவ் காந்தியே அடிக்கடி வற்புறுத்தியும் வந்தார். அதற்குஉண்மையாகவும் இருந்தார். ராஜீவ் காந்தியின் இந் நிலைப்பாட்டிற்கு அவர் இறந்த பின்னும் சிங்கள அரசியல் தலைவர் தமது நன்றிக் கடனைத் தெரிவித்துள்ளார்கள்:



ராஜீவ் காந்தி

இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை பற்றி எது வேண்டுமானாலும் கூறலாம். ஆனால் இலங்கையின் ஐக்கியத்தில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி உண்மையிலேயே அக்கறை கொண்டிருந்தார் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாதது அதற்கான விலையையும் அவர் செலுத்திவிட்டார் என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும் என முன்னாள் தேசிய பாதுகாப்பு அமைச்சரும் தற்போதைய கல்வி உயர் கல்வி அமைச்சருமான லலித் அத்துலத்முதலி கடந்த வாரம் பாராளுமன்றத்தில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

அதாவது இலங்கையின் ஐக்கியத்திற்கு ராஜீவ் காந்தியும், அவரது ஆலோசனையில் உருவாகிய இந்திய - சிறிலங்கா உடன்படிக்கையும் எந்தளவிற்கு உதவியது என்பதையும் புரிய இது போதுமானதாகும்.

இலங்கையின் ஐக்கியத்திற்கு ராஜீவ்காந்தியின் வெளிநாட்டுக் கொள்கை எந்தளவிற்கு பேருதவியாக இருந்தது என்பதை முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் வெங்கடேஸ்வரன் 'இந்தியாவைப் பற்றி இலங்கையில் என்னதான் பேசப்பட்டாலும் இலங்கையின் ஐக்கியம் மற்றும் ஒருமைப்பாடு தொடர்பாக இந்தியா அடிக்கடி பிரகடனம் செய்யும் கடப்பாடு இலங்கைக்கு இருக்கும் மிகப் பெரிய ஆசீர்வாதங்களில் ஒன்று என்பதை மறக்கக் கூடாது' எனக்குறிப்பிட்டார். மேலும் அவர் குறிப்பிடுகையில், காலப்போக்கில் இந் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படலாம். அத்தகைய மாற்றம் ஏற்படுகின்றபோது இந்தியா கூடுதலாக எதையும் செய்யாமலே, நேரடியாகச் சம்பந்தப்படாமலே ஈழம் உருவாகக் கூடும் எனத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறாயின் திரு வெங்கடேஸ்வரனின் கருத்தின்படி தமிழீழம் ஒன்றை பிரகடனப் படுத்தும் நிலையை தமிழீழ விடுதலைப்புலிகள் அடைந்து விட்டார்கள் என்பதேயாகும். இது உண்மையுங்கூட. இதற்கு அவசியமாகத் தேவைப்படுவது உலகத்தின் அங்கீகாரமாகும்.

இன்று உலகில் முதலாளித்துவ - கம்யூனிஸ முரண்பாடு குறைவடைந்து தேசிய இனங்களின் பிரச்சினைகளே முதன்மை பெற்ற பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றன. மூன்றாம் உலக நாடுகளுக்கு அப்பால் கிழக்கு ஐரோப்பியாவிலும், சோவியத் யூனியனிலும் இத் தேசிய இனப்பிரச்சினைகள் இன்று முனைப்பான பிரச்சினைகளாகவுள்ளன.

இத்தேசிய இனங்களின் போராட்டங்களுக்கு இன்று உலக வல்லரசுகளின் அங்கீகாரங்கள் முழுமையாக வழங்கப்படாவிடினும் எதிர்காலத்திலும் தொடர்ச்சியான புறக்கணிப்பை மேற்கொள்ள முடியாது. அவ்வாறு புறக்கணிப்பு நிகழுமாயின் உலக நாடுகளின் ஸ்திரத்தன்மைக்கு ஓர் அச்சுறுத்தலாக அமையும் விடயமாகும். இதனால் இப்பிரச்சினைகளை உலக வல்லரசுகளோ பிராந்தியவல்லரசுகளோ ஒதுக்கித்தள்ளி வைத்துவிட்டு புதியதொரு உலக அரசியல் ஒழுங்கொன்றை கட்டிவிட முடியாது.

இந் நிலையில் தென்னாசியாவின் ஸ்திரத்தன்மைக்கு இலங்கைத் தமிழர் விவகாரமும் ஒதுக்கித்தள்ளி வைத்துவிடமுடியாதது அடக்கப்பட்டவர்களின் போராட்டங்கள் வெற்றியை இறுதிநிலை எட்டும் வரை எவரும் கைகொடுப்பதற்கு முன்வருவதில்லை. ஆனால், எவரின் உதவியும் இன்றி வெற்றி நிச்சயிக்கப்படும் போது உதவுகிறோம் எனப் பலர் முன்வருவார்கள் ஏனெனில் மற்றவர் உதவுவதால் தமது நிலை பாதிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தினால் ஆகும்.

- ஜெயா -

---

அழகான...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் கட்டிமுடித்த உடனேயே போர்த்துக்கீசர் அதை தகர்த்து பொடியாக்கி விட்டனர்.

1782 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கடற்படைத்தலைவர் எட்வர்ட் உறியூஸ் அவர்கள் தலைமையில் ஒரு பிரித்தானிய கடற்படையும், சேர் ஹெக்டர் மன்றோ தலைமையில் ஒருபடையும் கிழக்குத் திசையிலே ஐரோப்பியர்கள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்த மும்முரமாகப்போட்டியிட்டு வந்த திருக்கோணமலைக்கு அனுப்பப்பட்டனர். இறுதியில் 1705 ஆம் ஆண்டு பிரிட்டிஷார் திருக்கோணமலையைக் கைப்பற்றினர். 1801ஆம் ஆண்டு இலங்கை சம்பிரதாயமாக பிரித்தானியாவுடன் இணைத்துக்கொள்ளப்பட்டது. இந்தியாவைத் தன்னாதிக்கத்துள் வைத்திருக்கவும், முழுஆசியாவையும்ஆட்டிப்படைக்கவும் கூடியதென அறிஞர்கள் கூறிய கேந்திரத்தானத்தை இவ் விதமாகப் பிரித்தானியா தனது ஆட்சிக்குள் கொண்டு வந்தது. 1803 ஆம் ஆண்டிலே திருக்கோணமலை பலமிக்க பாதுகாப்புதளமாகத் திகழ்ந்தது.

அக்காலந்தொட்டு, கீழ்த்திசையில் தனது கடற்படைகளை இயக்கும் பிரதான கடற்படைத் தளமாகத் திருக்கோணமலை பிரித்தானியாவால் உபயோகிக்கப்பட்டு வந்தது. இலங்கை அரசாங்கமும் ஐக்கிய இராட்சியமும் தங்கள்பரஸ்பர நன்மைகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்ய உடன்பட்டிருக்கின்றனவென 1947 ஆம் ஆண்டு பாதுகாப்பு ஒப்பந்தம் குறிப்பிடுகின்றது எனினும்திருக்கோணமலைக் கடற்படைத்தளத்தையும்,கட்டுநாயக்கா விமானத்தளத்தையும் கையளிப்பதுதான் இவ்வசதிகளாகுமென்று குறிப்பிடப்படவில்லை'யுத்தகாலத்தில்பிரிட்டிஷார் திருக்கோணமலையையும், கட்டுநாயக்காவையும் உபயோகித்தனர்' யுத்தத்திற்குப்பின், 1947ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் நடப்பதாக கூறிக்கொண்டு இவ்விரு தளங்களையும் பிரிட்டிஷார் தொடர்ந்து உபயோகித்து வர அனுமதிக்கப்பட்டனர்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் எந்தவல்லரசோடும் இணைந்து கொள்ளாத கொள்கையை அது கடைப்பிடித்ததனால் இந்த நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டியதாயிற்று. பிரதமர் ஐக்கியராச்சியத்திற்கு முன்னொரு போது விஜயஞ் செய்தபொழுது இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து வைத்தார். அது சம்பந்தமான கடிதப் போக்குவரத்துகள் தொடர்ந்து நடத்தப்பட்டன. கடைசியில் மூன்று ஆண்டு காலத்துக்குள் பிரித்தானிய தளங்களை அகற்றுவதென முடிவாயிற்று.

ஈழகேசரி (10-11-57)
(17-11-57)

(ஆங்கிலேயர் வெளியேறியதின் பின் திருமலை துறைமுகத்தின் நிலை அடுத்த வார இதழில் வெளிவரும்)

---

விழுதுகள்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் புலிகளுடன் போரை ஆரம்பித்த இந்தியப் படை சண்டை ஆரம்பித்த செய்தி அம்பாறை மாவட்ட போராளிகளுக்குத் தெரிவதற்கிடையில் ஒரு அவசர விஷயம் கதைக்க வேண்டும் என்று அப்போதைய அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் டேவிட்டை கூப்பிட்டு முகாமில் வைத்துக் கொண்டு இவனையும் அழைத்துவர அனுப்பியது. இவனோ முதல் டேவிட் வரட்டும் பிறகு தலைமைப்பீடத்துடன் கதைத்துவிட்டு வருவதைப்பற்றி யோசிக்கிறேன் என்று கூறி இந்தியப்படையினரின் வலையில் விழாது தப்பி விட்டான் இந்தியப்படை முழத்துக்கு முழம் முகாம் போட்டுத் தேடியும் கடைசிவரை அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை கிட்டத்தட்ட ஒரு வருடம் அம்பாறையில் இருந்த இந்திய இராணுவத்தினரை அலைய வைத்துவிட்டு தலைமையின் கட்டளையை ஏற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தான். அதுவரை தான் வகித்துவந்த அம்பாறை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் பதவியை தன்னால் உருவாக்கப்பட்ட போராளி கஸ்ரோவிடம் ஒப்படைத்துவிட்டு வந்தான்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் அரசியல் பொறுப்பாளராக இவன் விளங்கியபோது இறுதிவரை டயஸ் என்றால் யார் என்பதைக் கண்டுபிடிக்க இந்திய இராணுவத்தினரால் முடியாமல் போய்விட்டது.

நாலு புறமும் இந்தியப்படை வாகனங்கள் திரிகையில் இவன் சாவகாசமாக இந்தியப் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தான். அரசியல் வேலைகளை திறம்பட மேற்கொண்டு வந்தான். டயஸ் செய்த பிரச்சாரங்கள் உலகின் கண்ணைத்திறக்க வைத்தன. இங்கு ஒரு இனப்படுகொலை நடக்கின்றது என்பதை வெட்ட வெளிச்சமாக்கின.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# காஷ்மீர் தீவிரவாதிகள் இஸ்ரேலியர் மோதல்

(சிறிநகர்)

ஜம்மு காஷ்மீரின் தலைநகரான சிறிநகரில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள வந்திருந்த இஸ்ரேலிய பயணிகளை காஷ்மீரிய தீவிரவாதிகள் கடத்திச் செல்லமுற்பட்ட போது ஏற்பட்ட மோதலில் இஸ்ரேலியர் ஒருவரும் போராளி ஒருவரும் உயிர் இழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை சிறிநகரிலுள்ள படகு வீடொன்றில் இருந்த இரண்டு பெண்கள் உட்பட எட்டு இஸ்ரேலியரை கடத்திச் செல்ல காஷ்மீரிய போராளிகள் முனைந்தபோது ஏற்பட்ட மோதலில் இஸ்ரேலியரில் ஒருவரும் தீவிரவாதிகள் தரப்பில் ஒருவரும் உயிர் இழந்துள்ளனர். மேலும் மூன்று இஸ்ரேலியர்களும் இரண்டு தீவிரவாதிகளும் காயமடைந்தனர்.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கடத்தப்பட்ட இரு இஸ்ரேலியப் பெண்களும் தப்பியோடி இராணுவத்திடம் முறையிட்டுள்ளனர் இரு இஸ்ரேலியர்கள் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். காயமடைந்த மூன்று இஸ்ரேலியர்களும் இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதே நேரம் தீவிரவாதிகளிடம் இருந்து இஸ்ரேலியர்களால் மூன்று ஏ. கே. 56 ரக துப்பாக்கிகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தேசவிரோத

கைதாகி இருக்கும் மேற்படி மாணவர்களின் செயலைப் பார்க்கும் போது இன்னும்எம் மத்தியில் எத்தனை தேசவிரோதிகள் இலைமறை காயாக ஒளிந்து கொண்டிருக்கிறார்களோ என எண்ண வைக்கின்றது இப்படிப்பட்ட தேசவிரோத நாசகாரிகளை இனங்காண வேண்டிய பொறுப்பு தன்னை தமிழன் என நினைத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் உள்ள பொறுப்பாகும் என்றார்.

## தெற்கிற்கு

முயற்சிகள் கலாசார அமைச்சிலுள்ள சிங்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வந்தது என்றும் ஆனால் சில தமிழ் அதிகாரிகளின் முயற்சியால் வடபகுதி வைத்திய சாலைகளுக்கு கொண்டு வருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்த திசை திருப்பும் நடவடிக்கை பற்றி மேலும் தெரியவருவதாவது கடந்த மே மாதம் பதினான்காம் திகதி கொழும்பில் நடைபெற்ற உபஅதிகாரிகள்மட்டத்திலான கூட்டத்தில் இக் கருவிகளை திசை திருப்பும்தீர்மானம் முன்மொழியப் பட்டபோதிலும் குறிப்பிட்ட ஓர் அதிகாரி மட்டும் யாழ் அரச அதிபரிடம் அனுமதி பெற்ற பின்பே நிறைவேற்ற முடியும் எனக் கூறியதால் அரச அதிபர் கருத்து கொள்ளும் வரை பிற்போடப்பட்டது. மீண்டும்மே இருபத்து ஆறாம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் அரச அதிபர் பங்கு பற்றி வடபகுதிக்குக் கொண்டுவர ஆவன செய்தார் (ச)

# கைது செய்யப்பட்ட கொள்ளையர் விபரம்

வட மாகாணத்தில் கொள்ளைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கண்ணன் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவனது குழுவைச் சேர்ந்த மேலும் பலர் கைதாகி வருகின்றனர் விடுதலைப் புலிகள் எனப்பாவனை பண்ணிக் கொண்டு களவுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கொள்ளையரில் கைதுசெய்யப்பட்ட சிலரின் விபரம் வருமாறு,

ஜெயராசா நந்தகுமார் (கண்ணன்) சுழிபுரம் கிழக்கு, செல்லத்துரை பராஜசிங்கம் (ராஜா) 5/1 கிரீன்லிக் கல்லூரி வீதி அரியாலை, பொன்னுத்துரை விஜயகுமார் (குஞ்சன்) செட்டிகுறிஞ்சி, சிலாலை, பண்டத்தரிப்பு, குழந்தையன் செல்வராசா (பெரிய ராஜா) கல்வளை சண்டிலிப்பாய், கந்தசாமி உதயேந்திரன் (அப்புலிங்கன்) செட்டியார்புரம் அராலி, பாலசிங்கம் திருச்செல்வம் (சின்ன ராசா) ஆஸ்பத்திரி வீதி, சங்கானை, ஜெயராசா ஜெயக்குமார் (குமார்) சுழிபுரம் கிழக்கு சுழிபுரம், சின்னக்குட்டி இந்திரன் ரூபன், பாரதி லேன் சங்கானை, கார்த்திகேசு கந்தசாமி (ஜெயம்) தலைமோடை மல்லாகம், சுப்பிரமணியம் சுதாகர் (சுதா) கைதடி நுணாவில் சாவகச்சேரி,

இக் கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த மேலும் பலரை விடுதலைப்புலிகள் தேடி வருகின்றனர்.

## இந்திய

சனல் தொலைக் காட்சியில் மீண்டும் மீண்டும் ஒளிபரப்ப வேண்டும் என்று மத்திய புலனாய்வுக் குழு கேட்டுக்கொண்டிருந்த போதிலும் ஒரே ஒரு தடவை அதுவும் ஆங்கிலச் செய்தியறிக்கைக்கு பின்னரே ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்டது. என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சந்தேக நபர்களின் படங்களை பல்லாயிரக்கணக்கில் வடக்குக் கிழக்கில் விமானமூலம் விநியோகிப்பதாக சிறிலங்கா அரசாங்கம் உத்தரவாதம் அளித்தபோதும் நடைமுறையில் பெரிதாக ஒன்றும் செய்யவில்லை.

அத்துடன் மேலும் மாலை தீவில் சதிப்புரட்சியில் ஈடுபட்டிருந்த புளட் இயக்கத்தினரை சிறையில் சந்தித்துப் பேச மத்திய புலனாய்வுக் குழு விரும்பம் கொண்டிருந்த போதும் அது நிராகரிக்கப்பட்டதாகவும் அறியவருகின்றது;

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கொலையுண்ட குண்டு வெடிப்பு சம்பந்தமான விபரங்களை நாடிய மத்திய புலனாய்வுக் குழுவிற்கு இலங்கைப் புலனாய்வுத் துறையை சேர்ந்த ஏ. ஆர். எல். விஜயசேகரா போதிய தகவல் கொடுக்கவில்லை என்றும் தெரியவருகின்றது:

# தோழன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஒரு உழவு இயந்திரத்தில் மாப்பிள்ளை அழைப்பிற்கு சென்ற தோழன் அதிலிருந்து தவறி விழுந்து சக்கரத்திற்குள் மாட்டிக் கொண்டார். இதனால் அவருடைய ஒரு காலில் படுகாயமுற்றார்.

சந்திரன் என்ற 19 வயது இளைஞனே இவ்வாறு நேற்று செம்மணி வீதியில் நடந்த இந்த விபத்தில் படுகாயமுற்றவராவார்.

## ராஜீவ்

யிலும், வேலூரிலும் வாடகை வீட்டில் தங்கியிருந்தார் என்றும், ராஜீவ் கொலைக்கு முன்பும், பின்பும் ஒற்றைக்கண் நபர் இங்கு தங்கியிருந்தார் என்றும, ராஜீவ் கொலைசம்பந்தமான முக்கிய ஆவணங்கள் இவர் இருந்த இரு வீடுகளில் இருந்தும் கைப்பற்றப்பட்டதாகவும் மத்திய புலனாய்வுத்துறை அதிகாரி நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ஜெயக்குமாருடன் ராஜீவ் கொலை வழக்கில் ஏழு பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்;

# பரமேஸ்வரத்தில் கலை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

பரமேஸ்வரத்தில் கலை நிகழ்ச்சி ஒன்று இன்று (28-6 91) மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றத்தினர் ஒழுங்கு செய்துள்ள மேற்படி நிகழ்ச்சி வாரந்தோறும் வரும்வெள்ளிக் கிழமைகளில் நடைபெறவுள்ளன; இன்றைய இன்னிசை நிகழ்ச்சியை இசைக்கலைமணி செல்வி சாரதா சச்சிதானந்தன் நிகழ்த்துகிறார்.

## திட்டமிட்டு

றிக் தொன் அரிசியையும், 20 பரல் மண்ணெண்ணையும் நெடுந்தீவில் இறக்கப்பட்டு, பின்னர் முல்லைத்தீவில் இறக்க வேண்டிய 200 மெற்றிக் தொன் அரிசியை யாழ்ப்பாணத்தில் இறக்கியது அந்த அரிசியும் நெடுந்தீவிற்கு அனுப்பப்படவேண்டுமென கொழும்பில் இருந்து யாழ் செயலகத்திற்கு அறிவித்தல் வந்துள்ளது.

இந்த மாதம் 26 ஆம் திகதி வந்த லங்காகிறி கப்பலில் முல்லைத்தீவிற்கு உரமும், யாழ். மாவட்டத்திற்கு மருந்து தபால் மற்றும் தனியாருக்கு பொருள்களும் கொண்டுவரப்பட்டன.

யாழ். மாவட்டத்திற்கு உணவுகொண்டுவரும் கப்பலில் தனியாருக்குப் பொருள்கள் கொண்டு வந்தால் உணவுப் பொருள்களைப் பெருமளவு கொண்டுவரமுடியாது என்பதால் உணவுக் கப்பலில் தனி நபருக்குரிய பொருள்கள் கொண்டுவருவது நிறுத்தப்பட வேண்டும் என்றும் யாழ். அரசாங்க அதிபர் கேட்டிருந்தார்.

ஆனால் அந்த வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டு உணவுப்பொருள்களின் அளவுகளைக் குறைப்பதற்காகத் தனியாருக்குப் பொருள்கள் அனுப்பப்படுகின்றன.

26 ஆம் திகதி வந்த கப்பலில் யாழ். அரசாங்க அதிபர் தவிர்ந்த ஏனைய தனியார் நிறுவனங்களுக்குத்தான் பொருள்கள் வந்துள்ளன.

இந்த மாதம் காரைநகரில் உள்ளமக்களுக்குத் தைப்பான் என்ற கப்பலில் வந்த உணவு விநியோகிக்கப்பட்டுள்ளது; இது காரைநகருக்கெனவிசேடமாக வரவழைக்கப்பட்டதாகும்.

இந்த நிலையால் எதிர்வரும் வாரத்தில் யாழ் குடா மக்களுக்கு விநியோகிக்க உணவு இல்லை எனத் தெரியவருகின்றது.

## திட்டமிட்டவாறு

கிழக்கில் நடாத்துவதற்கு பரீட்சைத் திணைக்கள மட்டத்தில் பலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள போதிலும் முன்னர் அறிவித்தது போன்று இவற்றை நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் இணக்கம் தெரிவித்துள்ளதாக அவர் தெரிவித்தார் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக இதுவரை விண்ணப்பிக்காத பரீட்சார்த்திகளுக்கு ஓர் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது; இதன்படி 1991 டிசம்பர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான காலஎல்லை இம்மாதத்துடன் முடிவடைந்ததும், 1990 டிசம்பர் பரீட்சைக்கு இதுவரை விண்ணப்பிக்கத் தவறிய மாணவர்கள் தாம் முன்னர் கற்ற பாடசாலைகள் ஊடாக விண்ணப்பிக்கலாம்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சையைத் தொடர்ந்து பத்து நாட்கள் 1990ஆம் ஆண்டிற்கான க. பொ. த (சா. தர) புதிய, பழைய பாடத்திட்ட பரீட்சைகள் நடைபெறும்; (ச)

## நிவாரணம்

கீடு செய்யப்பட்டுள்ளது அண்மையில்யாழ். அரச அதிபர் அனுப்பிய புதிய திட்டப்படி இத்தொகையைசெலவு செய்வதற்கு அரச அனுமதிஅளித்துள்ளது;

★ வடபிராந்திய போ. வ. ச. பஸ்களை மட்டுப்படுத்தப்பட்ட சேவை அடிப்படையில் வடக்கில் ஓடவைப்பதற்காக வாராந்தம் இருபத்தைந்து பரல் டீசலை அனுப்பி வைப்பதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ அனுமதிப்பத்திரம் பெறாதவர்களும் வடபகுதிக்கு மண்ணெண்ணெய் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ வடபகுதிக்கு மண்ணெண்ணெய் கொண்டுவர கொழும்பிலும், அநுராதபுரத்திலும் அனுமதி வழங்கப்பட்ட போதிலும் வவுனியா இராணுவ அதிகாரியால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் நேற்று முன்தினம் பதினெட்டு லொறிகள் மண்ணெண்ணெயுடன் கொழும்பிற்கு திருப்பி அனுப்பப்பட்டன.

★ வடக்கில் ஐந்து குளங்களை சிரமதான அடிப்படையில் புனரமைப்புச் செய்ய போருட் ஸ்தாபனம் 32,000 கிலோகிராம் நிறையுள்ள உணவை வழங்க முன்வந்துள்ளது. மிகுதிக்குளங்களைப் புனரமைப்பதற்குத் தேவையான உணவைப் பெற்றுக்கொள்ள ஏனைய அரச சார்பற்ற இணைப்பு நிறுவனங்களின் உதவியை கோரவுள்ளதாக போருட் ஸ்தாபன உயரதிகாரி தெரிவித்துள்ளார்;

★ வடக்குக் கிழக்கில் வழங்கப்பட்டுவரும் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படும்வரை புதிய உணவு முத்திரை வழங்கப்பட மாட்டாதென சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார்.

★ மாணவ உணவுமுத்திரை தடையின்றித் தொடர்ந்தும் வழங்கப்படும், ஆனால்வடக்கு கிழக்கில் பாடசாலைகள் தடையின்றி நடைபெறுவதாக கல்விப் பணிப்பாளர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென கொழும்பில் அதிகாரி தெரிவித்தார்

★ கப்பல் மூலம் வடபகுதிக்குக் கொண்டுவரப்படும் பொருள்களை காங்கேசன் துறைத்துறைமுகத்தில் இறக்கி அங்கு களஞ்சியப்படுத்த அரசு எடுத்த முயற்சி அரசாங்க அதிபரின் ஆட்சேபனையைத் தொடர்ந்து கைவிடப்பட்டது. இதற்கென ஒரு உணவுக் கட்டுப்பாட்டு ஆணையாளரும் இரண்டு களஞ்சியக் காப்பாளர்களும் இங்கு அனுப்பி வைக்கப்பட இருந்தனர்.

காங்கேசன்துறைப் பகுதியைப் பாதுகாப்புப் பிரதேசமாக பிரகடனப் படுத்தும் வரை அங்கு பொருள்களை இறக்க முடியாது எனவும் அவ்வாறு இறக்கிக் களஞ்சியப் படுத்தினாலும் அவற்றை தம்மால் பொறுப்பேற்க முடியாது எனவும் யாழ். அரசாங்க அதிபர் திட்டவட்டமாக மறுத்து விட்டார். (ச)

## விழுதுகள்

இவ்வளவு வேலைகளுக்கும் மத்தியிலும் அந்நியருக்கெதிரான தாக்குதல் நடத்துவதை மட்டும் இவன் பின்போட்டதில்லை. 21 - 08 - 89 தான் இவனை நேசித்தவர்களுக்கு பேரிடியாக அமைந்த நாள். இவ்வளவு காலமும் தென் தமிழீழத்தின் கன்னாக் காடுகள் இவனுக்கு கவசமாயிருந்தன. அந்தக் கன்னாக்காடுகளின் சக்தி பருத்தித்துறை கட்டடங்களுக்கு இருக்கவில்லை. இவனுக்கெனவே தயாரிக்கப்பட்ட அந்த ரணை இவனைச் சந்தித்து தொலைத்தது.

''அவரோட எல்லோரும் நல்ல நேசம் இது டயஸைப் பற்றி மனைவி கூறியது அதை தென் தமிழீழ மக்கள் நிரூபித்தார்கள் டயஸ் மரணித்தான் என்ற சேதி கேட்ட தம்பிலுவில், திருக்கோயில், கோமாரி மற்றும் பல இடங்களைச் சேர்ந்த மக்கள் எத்தனையோ பஸ் பிடித்து எவ்வளவோ சோதனைகளுக்கு உட்பட்டு கொய்யாத்தோட்டம் வந்தனர். உண்மையாக மக்களை நேசித்தவன் இவன் என்பதை நெருக்கடியான அந்தக் காலகட்டத்தில் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த மக்கள் கூட்டமே சாட்சி.

இவனது மரணம் நிகழ்ந்த போது இவனது மனைவி 3 மாதக்கருவாகக்குட்டி டயஸைச் சுமந்திருந்தாள் இவன் தனது பிள்ளையின் முகத்தை பார்க்கவில்லைத்தான். இவனைப் போலவே தான் புலேந்திரன் முதலான போராளிகளின் நிலையும். இவர்களெல்லாம் சந்ததிக்காக மரித்தவர்கள்; அந்தத் திருப்தி இவர்களுக்கு உண்டு;

இன்று குட்டி டயஸ் தலைக் குமரன் புலி எங்கே? என்று கேட்டால் தனது படத்தைக் காட்டுகின்றான். உரித்துப் படைத்து அதே முழியும் அதே கறுப்பும்! புலியாக மாறுவேன் என்று அந்தப்பிஞ்சு சொல்வதைக் கேட்டு இழப்பின் கொடுமையை உணர்ந்து அவள் கலங்கவில்லை சிரிக்கிறாள். ''அப்பனின் குணம் அப்படியே'' என்றுபூரிக்கிறாள்.

அப்பன் முகமறியா இந்தப் பிஞ்சின் தலையில் போராட்டச் சுமை இறங்காமலிருக்க தமிழீழம் பெறும் நாளை நாமே விரைவுபடுத்துவோம்.

## க. பொ. த.

பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு தோற்ற விரும்பின் பதினைந்து ரூபாவையும் இரு பாடங்களுக்கு இருபது ரூபாவையும், மூன்றுபாடங்களுக்கு இருபத்தைந்து ரூபாவையும், நான்கு பாடங்களுக்கு முப்பது ரூபாவையும், ஐந்து பாடங்களுக்கு நாற்பது ரூபாவையும், ஆறும் அதற்கு மேற்பட்ட பாடங்களுக்கும் ஐம்பது ரூபாவும் செலுத்துதல் வேண்டும்;

இதேவேளை ஏற்கனவே இப்பரீட்சைக்காக முப்பத்தைந்து ரூபாவைச் செலுத்தி விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் அதிகரித்த தொகையான பதினைந்து ரூபாவிற்கு ஓர் பற்றுச்சீட்டைத் தமது கந்தோரில் பெற்று பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்; தவறின் அவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமென சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார். (ச)

ஆங்கில தட்டெழுத்தாளர் தேவை

ஆங்கிலத் தட்டெழுத்தாளர் தேவை. க. பொ. த. சா/த படித்த, ஆங்கில அறிவும் கொம்பியூட்டர் அறிவும் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பப் படிவங்கள் ஈழநாதம்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(B-2742) முடிவு திகதி 05-07-91

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.